காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

2-10-66

விலை 20 காசு



காங்கிரஸ்

அமெரிக்க பார்வையில்...!

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக அரசியலின் பெரும் பகுதி இயக்கங்கள் ஆசியாவையே மையமாக வைத்து உருப் பெற்று இருக்கின்றன.

இதை ஐரோப்பா இழந்துவிட்ட பெருமை என்று கூறுவோரும் உண்டு. ஆசியாவுக்குக் கிடைத்துள்ள பெருமை என்று கருதுவோரும் இருக்கிறார்கள்.

அரசியலின் சுழற்சிதான் ஆசியாவுக்குத் திரும்பியுள்ளதே தவிர, இதை ஒரு வரவேற்கத்தகுந்த மாற்றம் என்று எந்தவகையிலும் கூறுவதற்கில்லை.

இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் காணப்பட்ட ஒரே வகையான போக்கு, கருத்து, தொடர்பு உலக அரசியலின் சமீபத்திய மையப் புள்ளியாகவுள்ள இன்றைய ஆசியாவில் இல்லை.

வறுமை, பின்னடைந்த நிலை, நிலையற்ற ஆட்சி, உள்நாட்டுக் குழப்பங்கள், எல்லைப் பிரச்சனைகள் இப்படிப்பட்ட சிக்கல்களில் உழன்று உலகக் கவனத்தைத் தன் பக்கம் இழுத்துள்ளது ஆசியா.

இவைகளையெல்லாம் போக்குவதற்காக என்று உலகின் பெரும் நாடுகள் தந்த — இன்றும் தந்து வரும் பொருளாதார உதவிகள் பிரச்சனைகளை மேலும் சிக்கலாக்கியிருக்கிறது; அதுபோல ஆசிய நாடுகள் சிலவற்றை உள்ளடக்கிய இராணுவக் கூட்டுகள் சச்சரவுகளுக்குத்தான் மேலும் அடிகோலியிருக்கின்றன.

இந்த நிலையில் இப்போது புதிய ஒரு யோசனை அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் ஒரு மார்க்கமாகத் தெரிவிக்கபபட்டிருக்கிறது.

அண்மையில் அமெரிக்கா சென்ற பிலிப்பைன்ஸ் அதிபர் மார்காஸ் அமெரிக்க ஒத்துழைப்பில் கம்யூனிசம் அல்லாத ஆசிய நாடுகளின் ஒரு கூட்டாட்சி இக்கண்டத்தில் தோன்ற வேண்டும் என்று ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதே போன்ற ஒரு கருத்தை அதற்கும் சில நாட்கள் முன்னராக தாய்லாந்து அறிவித்திருந்தது.

ஆசிய மண்ணிலிருந்து அமெரிக்கா முற்றிலும் வெளியேறிவிட வேண்டும் என்று கம்யூனிஸ்ட் நாடுகள் தரப்பிலும்–கம்யூனிச ஊடுருவல் செல்வாக்கு ஆகியவைகளை பரவவிடக் கூடாது என்று அமெரிக்கத் தரப்பிலும் இதுவரை கூறி வந்ததைப் போலல்லாமல் இது வேறு வகையான யோசனை என்பதைத் தவிர மற்ற எந்தவகையிலும் இது பிரச்சனைகளுக்கு ஒரு மார்க்கமாக இருக்க முடியாது.

ஆசியாவில் ஏற்கனவே அமெரிக்கத் தொடர்பு பலவகைகளில் இருக்கிறது — அமெரிக்க மக்களிலேயே கணிசமான பகுதியினர் எதிர்ப்புத் தெரிவிக்கிற அளவுக்கு இடையல்லாமல் நேரடியாக அமெ-

உலக அரங்கில்

ரிக்கா முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ள வியட்நாம் — மற்றும் 'சீட்டோ' இராணுவக் கூட்டு இப்படி! இது மட்டுமல்ல; தாய்லாந்து, தெற்கு வியட்நாம், தென்கொரியா, பார்மோசா, ஜப்பான் முதலிய நாடுகள் உலக அரசியலில் வாஷிங்டன் பாதையில் செல்பவை!

இது வெளிநிலை; ஆனால் உள்ளுக்குள் நிலமைகள் அவ்வப்போது மாற்றம் கொள்கின்றன.

"இன்னும் அமெரிக்கத்தொடர்பு ஏன்?" என்ற கேள்வி ஜப்பானில் அழுத்தமாகக் கேட்கப்பட்டு வருகிறது ஓரிரு ஆண்டுகளாக.

"அமெரிக்கத்தொடர்புஇருந்தால் மட்டும், என்ன, சீனவுடன் பழகுவது பாவமா?" என்ற உலகம் வியக்கும் உறவுக்குப் புதிய இலக்கணம் வகுத்திருக்கிறது பாகிஸ்தான்.

"உதவிகள் பெற்றாலும் தனித்து சுதந்திரமாகவே இயங்க விரும்புகிறேன்" என்று ஒளிவு மறைவு இல்லாமல் தெரிவித்து வந்திருக்கிறார் பர்மா அதிபர் நூவின்.

இருபத்து நான்கு மணிநேர கவனத்தையும் செலுத்திப் பார்க்கும் அமெரிக்காவின்நிலை தெற்கு வியட்நாமிய மண்ணிலேயே பலமுறை எதிர்த்துக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

இவையனைத்தும் அமெரிக்கத் தொடர்புகள் இருக்கும் நிலையில்.

இதற்கும் மேலாக அமெரிக்காவின பார்வையில்—ஒத்துழைப்பில் கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளாகிய ஒரு கூட்டாட்சியை அமைப்பது ஆசிய பிரச்சனைகளுக்கு ஒருமார்க்கமாக அமையும் என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமையவில்லை.

ஏந்திய கைகளில் உணவை வழங்கும்போதே துப்பாக்கியையும் உடன் தருவதும்—

நீ எங்கள் கூட்டு அணியில் இல்லையா, அப்படியானல் நாங்கள் உனக்கு எதிரி

என்று கூறுவதும் உலக அரசியலில் வழக்கொழிந்து வரும்வேளையில், இப்படியொருயோசனை வெளி வந்திருப்பது வேடிக்கையாகவே உள்ளது.

அமெரிக்க ஒத்துழைப்பினல் முன்னேறி ஆசியாவிலேயே முதல் பெரும் நாடு என்று கருதப்படும் ஜப்பானே அமெரிக்க ஈடுபாட்டைக் குறைத்துக்கொண்டு தனித்துவாழ வேண்டும் என்ற கருத்தை நோக்கிச் செல்லும்போது, கம்யூனிசம் அல்லாத நாடுகளடங்கிய ஒரு கூட்டாட்சி என்று புதிய ஒரு எதிர்ப்புக் கூட்டு அமைப்பில் 'பரந்த நோக்கம்' என்ற தத்துவம் இல்லாதது மட்டுமல்ல; கெடுபிடி நிலைமை நீடித்து இருப்பதற்கான அத்தனை வழிவகைகளும் இருக்கின்றன.

பேரறிஞர்களும் தத்துவவாதிகளும் அவ்வப்போது கூறுவது நடைமுறைக்கு ஒவ்வாதது என்று ஒதுக்கிவரப்படும் "ஒருவிதஆட்சி" என்ற கோட்பாட்டுக்கும் இப்புதிய கருத்துக்கும் நிரம்பதூரம் இருக்கிறது.

—எஸ். ஆர்.

மேனன் கூறியது!

'சமூக ஆதிக்கம்' என்பதற்கும், 'அரசாங்க உடைமை' என்பதற்கும் இடையில் என்ன வித்தியாசம் என்பது தமக்குத் தெரியாது' என்று அண்மையில் டில்லியில் கூறினர் திரு. காமராஜ்.

—வி. கே. கே. மேனன்,
(எர்ணுகுளத்தில்)

காஞ்சி

மலர் 3   2—10—66   இதழ் 10

கடமையாற்றுவீர்

மாடுகட்டிப் போரடித்தால்
மாளாது என்று சொல்லி
ஆனைகட்டிப் போரடிக்கும்
அழகான தென் மதுரை!

பசி, பஞ்சம், பட்டினி, வயிற்றின் தேவையைத் தீர்த்துக்கொள்ள இயலாமல் சாவு என்றெல்லாம் பெரும் நோய்க்கு ஆளாகிவிட்ட இந்த நாட்டின்—சிறப்பாகத் தமிழகத்தின் பண்டைய நிலையை எடுத்துக்காட்டும் பாடல் இது. உழவின் பயனை உண்டு களிப்போரை விட, உழவின் மக்கள் இதனை எளிதில் புரிந்துகொள்வர். மாடுகட்டிப் போரடித்தால் வேலை தீராது; வளரும்; போரடித்து மணிமுத்தைப் பிரித்தெடுக்க ஆனை கட்டி மிதிக்கச் செய்தால்தான் முடியும் என்று செயல்பட்டு வந்த தமிழ்ப் பாண்டி நாட்டு செழிப்பு, வளம்பற்றிப் புனையப்பட்ட பழம்பாடல்! மண்வளச் சிறப்பின் மாகாவிடம்!! அதுமட்டுமா?

சுதந்திரக் குடிமகனுக்கு வாழ உரிமைகள் கொடுக்கப்பட்டுவிட்டதாக காங்கிரசுக்காரர்களால் கூறப்படுகின்ற இந்த நாட்டில், பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் நீதியைக் கேட்டுப்பெற்று நிலைநாட்டிக் கொள்ள நீதிமன்றங்களைத் தேடி ஓடித் திரவேண்டிய நிலையில் இன்றைய மக்கள் இருக்க,

"யானோ அரசன்?
யானே கள்வன்!"

என்றுகூறி அன்று அரியாசனத்திருந்தே உயிர்விட்ட பாண்டியன் நெடுஞ்செழியனின் பண்பார்ந்த வரலாற்றைப் பெற்ற பூமி மதுரை! நீதி நெளிந்தது! நியாயம் நிலைகுலைந்தது; தவறான தீர்ப்பு வழங்கிவிட்டோம்; ஆராயாது கொடுமை புரிந்துவிட்டோம்; முன்னோர் மரபுக்குப் பழி தேடிவிட்டோம் என்று உணர்ந்த மாத்திரத்தில் உயிர்நீத்தப் புகழ்காவியம் கொண்டது அது. இவ்வளவு மட்டுமா?

தவறு செய்வது ஆண்டவனேயானாலும் குற்றம் குற்றமே என்று நடுநின்று நாச்சிறப்புரைத்த நகரத்தின் பகுதி!

தருக்கு மனப்பான்மையிலே தருக்கித் திரியும் இந்தி நாட்டாரின் இந்தித்திணிப்பை எதிர்த்து அதனால் இந்த நாடு பெற்றுத்தீரும் என்று அறிவாளர்களால் நம்பப்படுகின்ற இழிநிலையை அழித்தொழித்து தமிழுக்கு ஏற்றமும், தமிழனுக்கு அரியாசனமும் அளிக்கப் போராடித் தீரவேண்டிய கட்டத்தில் பின்னப்பட்டுவிட்ட இந்த நாளைப்போலல்லாமல், சங்கம் கூட்டி, ஆய்வு நடத்தி தமிழ் வளர்த்துத்தந்த புகழ்க்காதை கொண்ட பொன்னாடு!

இன்னும் சொல்வோம்—

தமிழகத்தின் வரலாற்றில் அன்றும் இன்றும் இனி என்றும், மதுரை வட்டத்திற்கு ஒரு தனி இடமும் தனிச் சிறப்பும் உண்டு.

நாட்டு வரலாற்றில் மட்டுமல்லாமல், கழக வரலாற்றிலும் சிறப்பான இடம் பெற்றுள்ள அந்த வட்டத்தில், அக்டோபர் 1, 2-தேதிகளில், கழகத்தின் மாவட்ட மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழர்தம் பெரும்படை ஒன்றுதல் கண்டும், உணர்வு பெறுதல் கண்டும் பொறுத காலிகள், தமிழர் வாழ்வு தலைநிமிர்ந்திருக்க நடாத்தப்பட்ட மாநாட்டில் அன்றோர் நாள் தீமூட்டிவிட்டு, நெஞ்சு நிமிர்ந்து நின்று, கேலிப் புன்னகையுடன் கெக்கலியும் கொட்டி வேடிக்கைப் பார்த்த அந்த வட்டத்தில்தான்—

கழகத்தின் மாநாடா? காளையர் பெரும்படையா? கன்னித் தமிழ்காக்கும் காவலரோ! தென்னகத்துப் புன்மை இருள்போக்கும் புரவலரோ? இந்தியெனும் செந்தீயால் இந்நாட்டில் அடிமை முறை அமைக்க வரும் ஆணவத்திற்கு அந்திமம் காட்டப்போகும் செந்தமிழர் சங்கமமோ வென்றெல்லாம் திறந்த கண்களுடன், மலர்ந்தமுகங்களுடன் வியப்புக்குறிதோன்ற, அதுவே வினாக்குறியாய், இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என்றாகி சிறப்புக்காட்டவும், தேர்தல் காலத்தில் எப்படியெப்படி நடந்தாக வேண்டும் என்பதற்கான தெளிவு பெறவும் கழகத் தோழர்கள் அணியணியாய், குடும்பம் குடும்பமாய் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

கூடினோம், வாதிட்டோம், கலைந்தோம் என்ற வரலாற்றிற்கு அப்பாற்பட்டது கழக மாநாடுகள்.

கழகம் நடாத்துகின்ற ஒவ்வொரு மாநாடுகளும் வருங்கால வரலாற்றாசிரியர்களுக்கு பெரும் கடமைகளை உணர்த்துபவையாகும். அவர்கள் படைக்கின்ற வரலாற்றின் முக்கிய சம்பவங்களே இப்போதைய கழக மாநாடுகள் அனைத்தும் என்று நினைத்துப் பார்க்கும்போது நெஞ்சு நிரம்பிய மகிழ்ச்சியில் திளைக்க முடியும்.

அத்தகு மகிழ்ச்சியில் கழகத்தோழர்கள் பங்கு பெற்றிருக்கிறார்கள், மாநாட்டில் கலந்துகொண்டிருப்பதின்மூலம். உற்றார், உறவினர், சுற்றம் புடைசூழ வந்திருந்து கருத்து விருந்தருந்தி, காட்சிப்பலன்கண்டு கண்டவற்றையும் கேட்டவற்றையும் காணமுடியாமலும் கேட்க முடியாமலும் போனவர்களுக்கு எடுத்துச் சொல்லிப் பணியாற்ற வேண்டிய தலையாய கடமையைத் தோழர்கள் கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை நடைபெற்று முடிந்த மாநாடுகளைப் போலல்லாமல் இம்மாநாட்டு ஊர்வலத்தில் தனியான பல சிறப்பு அம்சங்களையெல்லாம் கண்டும் களித்துமிருக்கிறார்கள் பல்லாயிரக் கணக்கான தோழர்கள். இழிமொழிகளாலும், ஏச்சு வார்த்தைகளினாலும் கழகத்தின் புனிதத் தன்மைக்குக் களங்கம் கற்பிக்க முனைந்திருக்கும் காங்கிரசின் கருத்துக் குருட்டுத்தனத்திற்குத் தக்கபடியான பெற்றிமை பெற்ற ஊர்வலச் சிறப்பையும், அதன் பயனையும் பட்டி தொட்டியெங்கும் பரப்பும் பணியில் முழு மூச்சாக ஈடுபட வேண்டும்.

இவ்வளவு கடமைகளையும் கவனப்படுத்தும் வத்தலக் குண்டு மாநகரத்தில் நடைபெறும் மதுரை மாவட்ட மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவரா

(6-ம் பக்கம் பார்க்க)

வருந்துகிறோம்

இக்கிழமை தொடக்கத்தில், சிறந்த கல்வி நிபுணரும், வழக்கறிஞருமான டாக்டர் சி. பி. இராமசாமி (அய்யர்) இலண்டனில் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

டாக்டர் அய்யர் அவர்கள் இந்திய நாட்டின் ஒரு சிறந்த ராஜதந்திரி ஆவார். சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், பல்துறையிலும் புலமைமிக்க வல்லுநராகவும் விளங்கியவர்.

அரசியல், பொருளாதாரம், இந்திய கலாசாரம், தத்துவஞானம், சமயநிலை, கலைகள்பற்றிப் பல நூல்கள் எழுதி இருக்கிறார்.

இறுதியாக அவர் 'நம் காலத்திய வரலாறு' என்ற நூலொன்றை எழுதிக்கொண்டிருந்தார். இந்நூலுக்கான சில ஆதாரங்களைத் திரட்டுவதற்காகவே இலண்டன் சென்றிருந்ததாகத் தெரிகிறது.

டாக்டர் அவர்கள், இந்நாட்டின் பெரும் சாபத்தீடாக இருந்து வந்த தீண்டாமைப் பேயை விரட்டும் பெரும் பணியின் முதல் கடமையாக, காந்தியடிகளையும் முந்திக்கொண்டு திருவாங்கூர் சமஸ்தான திவானாக இருந்தபோது கோவில் நுழைவு திட்டத்தைச் செயல்படுத்திய சீர்திருத்த நோக்கம் கொண்டவர் என்பது மட்டுமல்லாமல், இந்திய அரசின் மொழிக் கொள்கையில் காணப்படும் இந்தி வெறியை, அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்தபோது பலமாகச் சாடியுமிருக்கிறார்.

நிஜாம் சமஸ்தானத்தில் திவான் பொறுப்பேற்றிருந்த காலத்து, இந்தியப் பிரதமர் நேருவைக்கூட, சமஸ்தானத்தின் மண்ணில் காலடி வைக்கக்கூடாது என்று கூறி திருப்பியும்விட்ட நெஞ்சுரமிக்கவர்.

உணர்ந்து ஒப்புக்கொண்ட உண்மையை நேர்மையுடன் எடுத்துக்கூறும் தன்மை இவர்பால் என்றுமிருந்திருக்கிறது.

இந்திய அரசின் பல்வேறுபட்ட துறைகளில் தலைமைப் பொறுப்பேற்றிருந்திருக்கிறார். இவரது அரும்பணியின் காரணமாகவே மேட்டூர் அணையும் பைகாரா மின் நிலையமும் எனக் கூறப்படுகிறது.

இத்தகு சிறப்புக்குரியவரின் இழப்பு, உண்மையிலே இந்தியத் துணைக்கண்டத்துக்கு ஒரு பேரிழப்பேயாகும். இவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும், சிறப்பாக இவரது புதல்வரும் இந்திய அரசின் சட்ட இலாகாவின் துணை அமைச்சருமான சி. ஆர் பட்டாபிராமன் அவர்களுக்கும் நம் ஆழ்ந்த வருத்தத்தை அறிவித்துக்கொள்கிறோம்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

யிருந்து மதுரை முத்து அனைவரையும் வரவேற்று அரிய உரை ஆற்றி இருக்கிறார்.

கழகப் பணியைத் தலைமைப் பணியாய்க் கருதிச் செயல்படும் வழக்கறிஞர் **இரத்தினவேல்பாண்டியன்** தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் **டி. பி. அழகமுத்து** மாநாட்டைத் திறந்து வைத்திருக்கிறார்.

சென்னை மாநகராட்சி மன்ற முன்னாள் மேயர் எம். எஸ் அப்துல் காதர் ஏற்றிவைத்த கொடியைப் போலவே, ஊரூருக்கும் கொடியேற்றி வைத்து, கொள்கை விளக்கமளித்து வெற்றி நமதென்று வீறார்ந்த நடையிட்டு அல்லும் பகலும் அயராதுழைக்கும் கடமையிலீடுபட அன்போடு வேண்டுகிறோம்.

மறைவு

கடந்த கிழமை, சென்னை மாநகராட்சி மன்றம் கூடி, முன்னாள் அமைச்சர் பி. பரமேஸ்வரன் அவர்களது மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மரணம் இயற்கைதானென்றாலும், சிலரது பிரிவுக்கு மட்டும் நாடெங்கிலும் இரங்கல் தெரிவிப்பதும், பிரிவை நினைந்து நினைந்து வருந்துவதும் எதனால் என எண்ணிப்பார்ப்பது, பொது வாழ்விலீடுபட வந்துவிட்ட அத்தனைப் பேருடைய கடமையுமாகும்.

பொதுவாழ்க்கையில் ஈடுபடுவதென்பது வெறுங்காலோடு முள்தடத்தில் நடப்பதற்குச் சமமாகும். நடந்து கடக்கவேண்டிய தூரத்தைக்கடந்து இலக்கினை எட்டிப்பிடித்து நெஞ்சுயர்த்தி நிற்பவர்களே பொதுத் துறையில் வெற்றி பெற்றவர்களாகவும், பாராட்டத் தக்கவர்களாகவும் காலமெல்லாம் தம் பெயரை விரவிவிடத் தக்கவர்களாகவும் இருக்க முடியும்.

இது குறித்துத்தான் புறநானூறு கூட "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇ தாமாய்ந்தனரே" என்று குறிப்பிடுகிறது போலும்! புகழ்ப் பெயரைப் பொறிக்கத் தொடங்கும் போராட்டத்தில் இடையில் துவள்வோரும், வழியில் தடம் மாறுவோரும் விதிவிலக்குகள் என்றே கருதப்படுவதுடன் இத்தகைய பாராட்டுக் குரிய நிலையினையும் அவர்கள் பெறுவதில்லை.

சிறப்புக் குறிய இத்தைகைய பொதுவாழ்க்கைத் துறையில், எந்த சார்பைச் சார்ந்தவர்களானாலும், அவர்களது சேவைச் சிறப்புக் குறித்தே கவனிக்க வேண்டுமேயல்லாது பிறப்பு வளர்ப்பு கொடிவழி குறித்து அல்ல—என்பதற்கான எடுத்துக்காட்டுதான் மாநகராட்சி மன்றத்தின் இரங்கல் தீர்மானமாகும்.

மறைந்த பரமேஸ்வரன் அவர்கள், நீண்ட காலமாகவே பொதுச்சேவையில் தன்னை ஒப்படைத்துக் கொண்டவர்கள் ஆவார்கள்.

தாழ்த்தப்பட்ட சமூகம், தாழ்ந்த நிலையிலிருந்த காலத்திலேயே, திரு. பரமேஸ்வரன் அவர்கள் தன் சமூக மக்களின் உயர்வுக்காகவும், ஒற்றுமைக்காகவும் அயராது பாடுபட்டவர். இவரது பாட்டனார் திவான் பகதூர் ஆர். சீனுவாசன் அவர்களைப் போலவே, சாதி இந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களுக்கும் இடையே பேதங்கள் வளர்வதையும், இருப்பதையும் போக்க அரும்பாடுபட்டு, ஓரளவு வெற்றியும் கண்டவர் ஆவார்.

இந்த வெற்றிக்கு எடுத்துக்காட்டுகள்தான், இவர் தமிழக அமைச்சரவையில் ஒரு அமைச்சர் ஆனார் என்பதுடன் சென்னை மாநகராட்சியில் மேயராகவும் தற்போதைய சட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கிறார் என்பதாகும். இதுமட்டுமல்லாமல், பல பொது நிறுவனங்களிலும் பங்கு பெற்றிருந்திருக்கிறார்.

இவரது இழப்பு, இந்தியத் துணைக்கண்டத்தின் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், சிறப்பாகத் தமிழகத்தன் அரசியலுக்கும் ஒரு பேரிழப்பேயாகும்.

இவரது இழப்புக் குறித்து, நாம் நம் இதயார்த்தமான இரங்கலை, இவரது உற்றார் உறவினர்களுக்கும், சிறப்பாக அவரது குடும்பத்தினருக்கும் படைத்துக் கொள்கிறோம்.

தம்பி

படமாம் படம்!

படம் எடுக்கப் போகிறார்களாம் — ஒன்று அல்ல, மூன்று! "உண்டானபோது கொண்டாடு கோடி" என்று பழமொழி சொல்லுவார்களல்லவா, அதுபோல செல்வமும் செல்வவான்களின் ஆதரவும் இருக்கும்போது மூன்று, முப்பது படம்கூட எடுக்கலாம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்! பட முதலாளிகளின் பார்வை குளிர்ச்சியாக இருக்கும்போதே, படங்களை 'மளமள'வென்று எடுத்துவிட வேண்டியதுதானே!! செய்யப் போகிறார்கள்! அறிவித்துவிட்டார்கள். சென்னையில் உள்ள மூன்று படப்பிடிப்புத்துறை முதலாளிகள், காங்கிரஸ் கட்சிக்காகத் தேர்தல் பிரசாரப் படம் தயாரித்துத்தர முன்வந்துள்ளார்கள்!

சினிமாக் கட்சி, சினிமாக் கட்சி என்று நமக்குப் பெயர் தம்பி! — பெயரா? — ஏளனப் பேச்சு வீச்சு — ஆனால் நாமல்ல, காங்கிரசுதான் சினிமாப் படங்களைத் துணையாகப் பெறப்போகிறது — நடிக நடிகையர் — படப்பிடிப்புத்துறைத் தொழில் நிபுணர்கள் தயாரிக்கப்போகும் படங்கள் அல்ல — மூன்று வளமான படப்பிடிப்பு அமைப்புகள் — தயாரிக்கப்போகும் படங்கள்!

முதலாளிகள் தயாரிக்கும் படங்களா? என்று முகத்தைச் சுளித்துக்கொள்ளாதே, தம்பி! சே. ஷிடலிசத்துக்கு ஆதரவான படமாகத்தான் எடுக்கப்போகிறார்கள்!

முதலாளிகளை ஒழிப்போம்! தொழிலாளிகளை வாழவைப்போம்! — என்ற ஊர்வலக் காட்சியைக்கூடக் காணக்கூடும். படம், தம்பி! படம்!

பணம்! அண்ணா! பணம்!! — என்று நீ கூறுவது என் காதிலே விழத்தான் செய்கிறது. ஆனால் எனக்கு இதிலே உள்ள மகிழ்ச்சிக்குக் காரணம் தெரியுமா, சினிமாவைக் கேவலமாகவும், சினிமாத் துறையினருடன் தோழமைத் தொடர்புகொள்வதை இழிவானதாகவும், தரக்குறைவான அரசியல் கட்சிகளே அப்படிப்பட்ட தொடர்பு கொள்ளும் என்றும் கூறிக்கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி, இப்போது கலை உலகின் தயவைப்பெற முன்வந்து இருக்கிறதே, அது கலை உலகின் வெற்றி! கலைஞர்களின் வெற்றி! என் பாராட்டுதல் அந்தக் கலைஞர்களுக்கு — என்னையும் கழகத்தையும் எதிர்க்கும் கலைஞர்களுக்குக்கூட! 'இருமல தும்மல' எல்லாம் என்னை ஏசும்போது, கலை உலகினர் நாலு வார்த்தை என்னையும் கழகத்தையும் ஏசிப் பேசுவதாலா எனக்கு எரிச்சல் வரப்போகிறது? இராகம் — தாளம் — பாவம் குறையாத பேச்சாகவாவது இருக்குமல்லவா!

சினிமாக் கட்சி, சினிமாக் கட்சி என்று நமது கழகத்தை, ஏ! அப்பா! அங்கு இடம் கிடைக்காத எரிச்சல் கொண்டதுகளெல்லாம் முன்பு பேசுவார்களே! அவர்களுடைய முழக்கத்தில் சரிபாதி இதுபற்றித்தானே! இப்போது? எப்படிப் பேச முடியும்? ஆகவே, தம்பி! நன்றாக ஆராய்ந்து பார்த்திடின், காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்துள்ள கலைஞர்கள் நம்மீது அந்தக்கட்சி பூசிவைத்த கறையைத் துடைத்திடும் தொண்டாற்றி, கழகத்துக்குத்தான் நல்லது செய்கிறார்கள்! அதனால்தான், நான் எங்கிருந்தாலும் வாழ்க! — என்று உளமாறக் கூறி வருவது.



காட்டும் பசுமைகள் நாட்டில் இருக்குமா?

சினிமாப் படங்களைக் காங்கிரசின் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்த முனைவது, ஒருவகையில், கலைஉலகின் வெற்றி, கலைஞரின் வெற்றி. நமக்கு அந்த வாய்ப்புக்கிடைத்திடவில்லையே என்பதால், அதனைக் குறைத்து மதிப்பிட, நாம் யாரும் ஏமாளிகள் அல்ல.

கலைஞர்களின் தோழமையையும் தொடர்பையும், குறைத்து மதிப்பிட்டவர்கள், கேவலமாகப் பேசியவர்கள் அவர்கள், நாம் அல்ல! இன்று அந்த தொடர்பு தக்க பலன்தரும் என்ற பூரிப்புடன் உள்ளவர்கள் அவர்கள்!! கலைஞர்களின் தொடர்புபற்றி மிகக் கேவலமாகக் காங்கிரஸ் தலைவர்கள் — பேச்சாளர்கள் மட்டுமல்ல—பெருந்தலைவர்கள்-தாக்கியபோது தம்பி! நாம் நினைவுபடுத்தினோம், காங்கிரஸ் தூய்மையான விடுதலை இயக்கமாக இருந்தபோது, நாடகத்துறை வித்தகர் விசுவநாததாசும், கொடுமுடி சுந்தராம்பாள் அவர்களும், வேறு பல கலைஞர்களும் காங்கிரசுக்காகப் பாடுபட்ட பான்மையை! அப்போதும் காங்கிரசின் பெருந்தலைவர்கள் கலைஞர்களை மதிக்க மறுத்தனர்; 'கூத்தாடிகள்' என்று கேவலமாகப் பேசினர்! இன்று? கலையின் வலிவை உணருகிறார்கள்! கலைஞர்களின் தொடர்பைப் போற்றுகிறார்கள்! வரவேற்கத்தக்க வெற்றி — கலை உலகுக்கு. படம் காட்டப்போகும் பாடம் இதுவே.

காங்கிரசின் சாதனைகளை இந்தப் படங்கள் எடுத்துக் காட்டுமாம். காட்டட்டும்; ஆனால் சர்க்காரைக் காங்கிரஸ் கட்சி நடத்திக்கொண்டு வருவதால், சர்க்கார் செய்திடும் சாதனைகள்பற்றி — அணைக்கட்டுகளிலிருந்து ஆரம்பப் பள்ளிகள் வரையில் செய்தித்துறை தொடர்ந்து படங்களை வெளியிட்டு வருகின்றனவே— அவை போதாமலா, புதிதாகத் தேவைப்படுகிறது? விந்தைதான்! தரமாகவே அமைந்திருக்கிறது செய்தித் துறைப் படம்!

உருக்கமான குரலொலி கேட்கிறது, வறண்ட பூமி! வெடித்துக்கிடக்கும் வயல்கள்! துடித்திடும் மக்கள்! வானத்தை அண்ணாந்து பார்க்கிறார்கள்! கண்ணீர் வடிக்கிறார்கள்!!

உடனே ஒரு அணைக்கட்டுக் காட்சி! தண்ணீர் குபுகுபுவெனப் பாய்ந்தோடி வருகிறது!! பூமி குளிர்கிறது! பயிர் வளர்கிறது! இப்படி ஒரு இன்பக்காட்சி!

இவைகளைப் பார்க்கவில்லையா மக்கள்? நிரம்ப! பார்த்து? படத்திலே உள்ள பசுமை வாழ்க்கையிலே இல்லையே என்று ஏக்கம் கொள்கின்றனர்.

புதிதாக இதுபோன்ற படங்களை வெளியிட்டு, மக்களின் ஏக்கத்தைத் துடைத்திட வா முடியும்.

தம்பி! நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் '50—60' என்று ஒரு காட்சியைத் தமது படம் ஒன்றில் இணைத்துக் காட்டினார். பலர் பார்த்திருக்கக்கூடும்!

சுதந்திரம் வந்ததென்று சொல்லாதிங்க,
சும்மா சும்மா வெறும் வாயை மெல்லாதிங்க

என்று திருமதி டி. ஏ. மதுரம் பாட, நகைச்சுவை மன்னர், பத்தே வருடங்களில் சுதந்திரத்தின் பலனாக நாடு எத்தகைய பூந்தோட்டமாக மாறப் போகிறது பார் என்று பெருமிதத்துடன் கூறி, எதிர்கால வளம் பற்றிய எழில் மிக்க காட்சிகளைக் காட்டுவார். பார்த்தவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால், நல்லவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் நாசமாகிவிட்ட நிலையில், காங்கிரசின் சாதனைகளை விளக்கிட மூன்று புதிய படங்களை எடுத்துப் போட்டுக் காட்டி விடுவதால், மக்கள் குதூகலமடைந்து காங்கிரசுக்கே எமது ஓட்டு என்று கூறிவிடுவர்.

படம் பார்த்துவிட்டு வந்ததும், படி அரிசி எட்டணா என்ற அளவுக்காவது விலை கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் நிலையும் கண்டால், மகிழ்ச்சி அடைவார்கள்!

புதிய புதிய அணைக்கட்டுகளைக் காண்க! அமோகமான விளைச்சல் காண்க! என்ற பேச்சும் காட்சியுமா, காய்ந்த வயிறுக்குத் திருப்தி தந்துவிடும். பார்த்தால் பசி தீருமா!

இது காங்கிரஸ் தலைவர்களுக்கும் தெரியும். பட முதலாளிகளுக்கும் தெரியும். ஆகவே அந்தப் படங்கள், காங்கிரசின் சாதனைகளை எடுத்துக் காட்டுவதாக மட்டும் இருந்திடப் போவதில்லை; எதிர்க் கட்சிகளை— குறிப்பாகக் கழகத்தை—வெகு சிறப்பாக என்னைக் கேவலப்படுத்திடும் கேலி செய்திடும் காட்சிகள் கொண்டதாக இருக்கும்.

சென்ற பொதுத்தேர்தலின்போதும் இதுபோன்ற 'படம்' காட்டினார்கள்! முறை, பழையதுதான்! பலனும், முன்பு போலத்தான் இருக்கும். ஆனால் இம்முறை, நம்மைத் தாக்குவதில் சற்று வேகம்—காரம்—சூடு—அதிகம் இருக்கும். அதாவது நம்மைத் தாக்குவதற்காக அவர்கள் தமது படைக்கலன்களை மேலும் கூர்மையுள்ளதாக்கிக் கொள்ளவேண்டி வருகிறது!! இந்நிலை, படைக்கலன்களுக்கு அல்ல, நமக்குக் கிடைத்துள்ள 'தாங்கும் சக்தி'க்குத்தான் பெருமை தருவதாகும்.

அண்ணா! அவர்கள் படம் எடுக்கப் போகிறார்களாமே, நாம்?—என்று ஆவலோடு கேட்டார், ஒரு தம்பி!

நமக்கும் சேர்த்துத்தானே அந்தப் படங்கள்? என்றேன் நான்.

என்ன அண்ணா! புதிர் போடுகிறீர்கள்—என்று கவலை ததும்பக் கேட்டார், தம்பி.

தம்பி! படம் பார்த்தவர்கள், பகலில், கடைவீதி போவார்கள் அல்லவா? விலை ஏற்றம் கொட்டுமல்லவா? அப்போது அவர்கள் என்ன எண்ணிக் கொள்வார்கள்? படம் காட்டினார்கள் படம்! பாலும் தேனும் ஓடுகிறது! நாங்கள் சாதிக்க வேண்டியவைகளைச் சாதித்துவிட்டோம் என்று பாடிக் காட்டினார்கள், இங்கேயோ...!—என்று பேசி பெருமூச்சு விடுவார்கள் அல்லவா?—என்றேன். ஆமாம் என்றார் தம்பி! அந்தப் பெருமூச்சு, காங்கிரசுக்கு ஓட்டா வாங்கித் தரும்? என்று கேட்டேன். தம்பி புன்னகை புரிந்தார். அதனால்தான் தம்பி! நான் கூறினேன், படம் நமக்கும்

கழகக் காட்சிகளைக் கத்தரிக்கோல் விடுமா?

சேர்த்துத்தான் என்று — என்று கூறினேன். சரி தானே!!

தம்பி! ஒரு கட்சி, ஆட்சியை நடத்திய நிலையில், தன் சாதனைகளை எடுத்துச் சொல்ல முனைவது ஒன்றே மக்கள் அந்தச் சாதனைகளைச் சாதனைகள் என்று ஒப்புக்கொள்ளவில்லை அல்லது உணரவில்லை என்பதற்குச் சான்றுதானே?

போகட்டும்; தம்பி! காங்கிரசின் சாதனைகளைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல, காங்கிரசாட்சியிலே நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனைகளைப் படம் பிடித்துக் காட்டினால், 'கத்தரிக்கோல்' சும்மா இருக்குமா?

மூன்று படம் எடுக்கப் போகிறார்களே முதலாளிகள், அவர்களுக்கே தெரியும்! மிக நன்றாகத் தெரியும்!!

ஒருபுறம் நான்! எதிர்ப்புறம், கனம். சுப்பிரமணியம்! அவர் ஆத்திரத்துடன்! நான் அச்சத்துடன்! அவர் கேட்கிறார், 'ஏ! அண்ணாத்துரை, என்னை கசாப்புக் கடையா வைக்கச் சொல்லுகிறாய் என்று'-உடனே ஒரு காங்கிரஸ் படை, இடி இடியெனச் சிரிக்கிறது—கையொலி எழுப்புகிறது. ஒரு காட்சி! அதை அடுத்து "இதோ பாரீர்!" என்று ஒரு குரல்! மலர்ந்த முகத்துடன் ஒரு காங்கிரஸ் தலைவர்-ஆவல் ததும்பும் கண்களுடன் மக்கள்—என்ன? என்ன? என்ற கேள்வி ஒலி! "எமது சாதனை! நாலாவது திட்டத்தில்!!" என்று பெருந்தலைவரின் பெருமிதப் பேச்சு! எதிரே பார்த்தால், குட்டிகள் பலவற்றுடன் பன்றிகள்!! என்ன இது? என்று ஒருவரின் கேள்வி — தயக்கத்துடன்! பன்றிப் பண்ணை! பன்றி இறைச்சிக்கு நிரம்பகிராக்கி. ஆகவே பன்றிப் பண்ணை! இரு துறையிலும்! தனியார் துறையிலும்—பொதுத் துறையிலும்!!—என்ற விளக்கம். காட்சி, படமாக்குவது எளிது! பொய் அல்ல; புனைசுருட்டு அல்ல! நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல இடங்களில் பன்றிப் பண்ணைகள் வைக்கப் போவதாக, பல திங்களுக்கு முன்பே இதழ்களில் செய்தி வெளிவந்தது. உண்மையைத்தான் படமாக்குகிறோம். ஆனால் கத்தரிக்கோல்? சும்மா இருக்குமா? கலை உலகினர் அனைவரும் அறிவர்!

ஆகவே அவர்கள் படங்கள் மூலம் எதிர்க் கட்சிகளைக் கேவலப்படுத்த முயலுவது, கட்டுடல் படைத்த காளையை இருப்புத் தூணிலே இறுகக் கட்டிவைத்து விட்டு, வலிவும் துணிவுமற்ற பேர்வழி, 'அடி அடி' யென்று அடிப்பதற்கு ஒப்பானது. கலைஞர்கள் அறிவார்கள்!!

பாலோ! பால்! என்று அழும் தாயைக் காட்டலாம்; பால் கிடைக்காது அலைந்து அலுத்துப்போன தகப்பனைக் காட்டலாம்! ஒரு காங்கிரஸ் தலைவர் படத்தைக் காட்டலாம். பாலும் தேனும் கலந்து ஓடும்!—என்று அவர் முன்பு முழக்கமிட்டது அந்த ஏழையின் காதில் விழுவது போன்ற நிலையைக் காட்டலாம். எங்கிருந்தோ ஒரு கழுதைக் குரல் கிளம்புவதைக் காட்டலாம். அன்றைய இதழில், கொட்டை எழுத்தில் கழுதைப் பாலைச் சாப்பிடலாம்—ருசியானது—வலிவு தரவல்லது என்று அமைச்சர் ஒருவர் பேசியிருப்பது வெளிவந்திருப்பதைக் காட்டலாம். ஏழை, தன் வேதனையையும் மறந்து, கழுதைப் பால்! கழுதைப் பால்! காங்கிரஸ் நமக்குத் தருவது கழுதைப் பால்!—என்று கூவிச் சிரிப்பதைக் காட்டலாம். எளிதான காரியம்! எடுக்க விடுவார்களா? கத்தரிக்கோல் சும்மாவா இருக்கும்.

அதிகமாகக்கூட நாம் கஷ்டப்பட்டு கற்பனை செய்துகொண்டிருக்கத் தேவையில்லையே, தம்பி! கொடிபிடித்த வீரர்கள், நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்! நாட்டுக்கு சுபிட்சம் தரும் திட்டம்! என்று முழக்கமிட்டபடி ஊர்வலம் செல்லுவதைக் காட்டிவிட்டு, ஒரே ஒரு எலி, பயத்துடன் வளைக்குள்ளே நுழைவதையும், அதை ஆவலோடு ஒரு காங்கிரஸ்காரரும், ஒரு பூனையும் பார்த்திடும் காட்சியையும் காட்டி, அன்றைய இதழில், காங்கிரஸ் அமைச்சர் கெண்டா சிங் என்பவர், 'எலி சத்துள்ள உணவு', சாப்பிடலாம்! என்று உபதேசம் செய்தாரே அந்தச் செய்தி வெளிவந்திருப்பதையும் காட்டினால் போதுமே! கொட்டகை அதிருமே!! ஆனால், எடுத்திட விடுவார்களா?

ஆக, நமது கரங்களைக் கட்டிப் போட்டுவிட்டு, அவர்கள் தமது சாதனைகளை விளக்கிடும் படம் காட்டப்போகிறார்கள். காட்டட்டும்! பாவம்! அந்த ஆசையும் தீர்ந்துபோகட்டும்!!

நல்லாட்சி இல்லை

இன்னபொரு ளென்றில்லை! எல்லாம் இன்று
யானைவிலை குதிரைவிலை கேட்பா ரில்லை!
சொன்னாலும் கேட்கவில்லை ஆளும் கட்சி
சுரண்டலினை ஒழிக்கவில்லை! பேச்சே இல்லை!!
உண்பதற்கு சோறில்லை! சிலபேர் 'கொஞ்சம்'
உண்டதுவோ செரிக்கவில்லை! பொய்ச்சொல் இல்லை
'நண்பர்கள்' சோசலிசம் நாவி லுண்டு
நடப்பிலுண்டா என்றாலோ இல்லை இல்லை!!

மந்திரிமார் கூட்டத்தில் பேசக் கேட்டால்
மனம்பதறும் வாய்பதறும் பொய்யே சொல்வார்!
இந்தியாவில் பட்டினியா என்று கேட்டு
இறந்தவர்யார் காட்டென்று சூளு ரைப்பார்!
மந்திரிமார் உலகெங்கும் பிச்சை கேட்டும்
மக்கள்பசி தீர்க்கவில்லை தோற்றுப் போனார்!
எந்திரமாய் உழைக்கின்ற மக்கள் இன்று
இறந்திடவும் அஞ்சவில்லை! வெட்கம் வெட்கம்!

நாளுக்கோர் சோசலிசம் கூவி விற்று
நாமெல்லாம் அதைநம்ப வேண்டு மென்றார்!
ஆளுக்கோர் சோசலிசம் பாடிக் கொண்டு
ஆகாய ஊர்வலத்தில் தேர்ச்சி பெற்றார்!
தாளுக்குள் விரிவாகத் திட்டம் தீட்டி
தாம்பிழைக்க வழிசிலவே சொல்லிச் செல்வார்!
கேளுங்கள் சொல்லுகிறேன்; இந்த ஆட்சி
கவிழாமல் வாராது நல்ல ஆட்சி!

—வி. ஆர். துரை

மக்கள் உணரும் அளவில், முறையில்....

நாம் படம் எடுத்துக் காட்டாமலேயே, நாட்டிலே உள்ள வேதனைக் காட்சிகளைக் கண்டு கண்டு வெதும்பிப் போயுள்ள மக்கள் இதயத்தில் அந்தக் காட்சிகள், துளியும் கலையாமல் இருக்கத்தான் செய்கின்றன!!

ஏதோ ஒரு பத்திரிகையில் — தமிழ்நாட்டு இதழிலேதான்—பார்த்தேன் — என்னையும் ராஜாஜி, காயிதேமில்லத் ஆகியோரையும் ஒரு கழுதைமீது உட்காரவைத்திருப்பதுபோல, ஒரு கேலிச்சித்திரம். என்னோடு தோழமைத் தொடர்பு கொண்டதற்காக, மதிப்புக்குரிய அந்த இரு பெரியவர்களுக்கும் ஒரு இதழ் இத்தகைய கேவலத்தை ஏற்படுத்திக் காட்டி இருக்கிறதே என்று எண்ணி மெத்த வருத்தப்பட்டேன்.

இதழிலே இது என்றால், படத்திலே இதனைவிடக் கேவலமான காட்சிகளையெல்லாம்கூட இணைத்துக் காட்டலாம் — காட்டட்டும்! எடுத்துக்கொண்டுள்ள காரியத்துக்குத் தரவேண்டிய 'விலை' இவை என்றுதான் கருதிக்கொள்வோம். ஆனால் மக்கள்? காங்கிரசின் காவலர்களாகத் தம்மைக் கருதிக்கொண்டுள்ளவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய செயலை, கண்ணியமானது என்று கருதுவார்கள்? மக்கள் அவ்வளவு இழிதன்மை கொண்டவர்கள் அல்ல!

தம்பி! நான், மக்களுடைய அந்தப் பண்பிலேதான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்; மிகுந்த நம்பிக்கை. அவர்களிடந்தான் முறையிடுகிறேன். மக்களிடம், அவர்கள் உணரும்படியான அளவிலும் முறையிலும் இந்த முறையீடு போய்ச்சேருமானால், அவர்கள் நீதியின் பக்கம் திரண்டெழுந்துவந்து நிற்பார்கள் என்று திடமாக நம்புகிறேன். வரலாற்று ஏடுகள் எனக்குள்ள அந்த நம்பிக்கையை மேலும் வலுவுள்ளதாக்குகின்றன. ஆகவேதான், இந்தத் தொண்டு வெற்றிபெற, தம்பி! நீ உன்னை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதனைகள்! தம்பி! சாதனைகளை மதிப்பிடவேண்டுமானால், ஒரு கட்சி நடத்திக் காட்டிய சாதனைகளுடன் வேறோர் கட்சி நடத்திக்காட்டிய சாதனைகளை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்; அந்த இருகட்சிகளும் ஆட்சி நடத்தியநிலை இருந்திடவேண்டும்.

திறமை—வலிவு—செல்வாக்கு — அறிவு—பண்பு—எனும் இவைபற்றிய மதிப்பீடு போடுவதென்றாலும் குறைந்தது இருவர்களின் நிலையையாவது கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒப்பிட்டுப்பார்த்து, இவரைவிட அவர் திறமைசாலி. ஆனால் வலிவு இவருக்குத்தான் அதிகம் என்ற இந்த முறையில்தான் மதிப்பீடு தர முடியும்; அதுதான் பொருள் உள்ளதாகவும்—பொருத்தமானதாகவும் இருக்கும்.

எடுத்துக்காட்டு வேண்டுமெனின் இதனைக் கூறலாம். இங்கிலாந்துநாட்டில் இன்றுஅரசாளும்தொழிற் கட்சியின் சாதனைகளை, முன்பு அரசாண்ட கன்சர்வேடிவ் கட்சியின் சாதனைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து எந்தக் கட்சியின் சாதனைகள் சிலாக்கியமானவை என்று கண்டறிந்து கூறுவது.

இந்த வாய்ப்பு, புறநாடுகளிலே உள்ளதுபோல இங்கு இல்லை.

இங்கு தொடர்ந்து காங்கிரஸ்கட்சியே ஆட்சியில் இருந்து வருகிறது. ஆகவே மக்களுக்கு நலன்தரத்தக்க சாதனைகள் செய்தளிப்பதில எந்தக் கட்சி தரமானது, எந்தக்கட்சி அவ்வளவு தரம் இல்லாதது என்று கூறிட இயலாது; ஒப்பிட்டுப் பார்த்திடும் வாய்ப்பு இல்லாததால்.

ஆகவே காங்கிரசாரும் அவர்தம் ஆதரவாளரும், சாதனைகள் — சாதனைகள் — என்று பேசும்போது, ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டவர்கள் ஒன்பது பேர், அதிலே முதலாவதாக வந்தவன் முத்துச்சாமி, இரண்டாவதாக வந்தவன் இருதயசாமி என்று கண்டறிந்து கூறுவதுபோலக் கூறவில்லை; கூறிடும் வாய்ப்பு இல்லை.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை—என்பார்கள்! அதுபோல, வேறு எந்தக்கட்சியும் ஆட்சிப் பொறுப்பினைப் பெற்றிடாத நிலையில், ஆட்சி நடத்திடும் ஒரே கட்சியான காங்கிரஸ், சாதனை! சாதனை! என்று கூறிவருகிறது.

உண்மையான மதிப்பீடு தெரியவேண்டுமானால், இன்று காங்கிரஸ் நடத்திடும் ஆட்சி, வேறோர் கட்சியிடம் கிடைத்து, அந்தக் கட்சி என்னென்ன சாதனைகளைப் பெற்றுத் தருகிறது என்று பார்த்து, இரண்டையும் ஒப்பிட்டு, எது தரமுள்ளது என்று தீர்மானிக்கவேண்டும். அதற்கு இந்த இருபதாண்டுகளாக வழி இல்லை. இன்னும் இருபது ஆண்டுகளுக்கும் வழி இல்லை என்கிறார் காமராஜப் பெரியவர்.

அதாவது வேறோர் கட்சியின் திறமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று விரும்புகிறார். அந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே திட்டமிட்டு வேலை செய்துவருகிறார்.

மக்கள் அளித்திடும் தீர்ப்பைப் பொறுத்து இருக்கிறது அவர் திட்டம். ஆனால், 'போட்டி' கூடாது'!—என்கிறார்.

குழந்தை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளிவிளையாடுகிறான் என்பார்கள்; வேறு எந்தக் கட்சியும் ஆட்சி நடத்த விடக்கூடாது என்று திட்டமிடுவது, அத்தகைய விளையாட்டிலே உள்ள விருப்பம் காரணமாகப்போலும்!

அது எப்படியோ போகட்டும்; ஆனால், வேறு ஒரு கட்சியின் ஆட்சி ஏற்பட்டு, அப்போது கிடைத்திடும் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலொழிய காங்கிரசின் சாதனைகளைப் பற்றிப் பெருமிதத்துடன் பேசுவதிலே பொருள் இல்லை! ஆனால் பேசுகிறார்கள்!

"பயலே! என்னைப்போல மீசையை முறுக்கிவிட உன்னால் முடியுமா?" என்று கேட்டான் பக்கிரி; வயது நாற்பது; பனிரெண்டு வயது சிறுவனைப் பார்த்து

"சித்தப்பா! எனக்கு இப்போதுதான் மீசை கருக்குவிடுகிறது! இதற்குள்ளே வம்பு பேசுகிறாயே! காலம் வரட்டும்! மீசை கொத்து கொத்தாக வளரும். அப்போது நான் முறுக்கிக் காட்டுகிறேன். அப்போது தெரியும், மீசையை முறுக்கிவிடுவதில், நம் இருவரில்

உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில்..

யார் வல்லவர்கள் என்பது. இப்போது பேசி என்ன பயன்! ஆனால் சித்தப்பா! இதையும் தெரிந்து கொள். எனக்கு, முறுக்கிவிடும் அளவு மீசை வளரும் காலத்தில், உனக்கு உள்ளது உதிர்ந்து போய்விடும்" என்றான் சிறுவன். கதையில்!

நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள், நாட்டு மக்களை விவரம் அறியாதவர்கள் என்ற நினைப்பில்—இதோ பார், காங்கிரசின் சாதனைகளை! காட்டு உன சாதனைகளை!!"— என்று!

ஆட்சி என் கரம் வரட்டும், அப்போது நான் செய்தளிக்கும் சாதனைகளைக் காணலாம்; உன் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம் என்று கழகம் கூறுகிறது. உடனே காமராஜர் கடுங்கோபம் கொண்டு, "மூஞ்சியைப் பார்! முகரக் கட்டையைப் பார்!" என்று பேசுகிறார். உலகிலே பாதி சுற்றிவிட்டாரல்லவா! அதற்கு அடையாளம்போல விளங்கும் உயர்தரமான பேச்சு!!

இவர்கள் இந்த நினைப்புடன் இருப்பது மட்டுமின்றி, மக்களிடம் சென்று, நாடாள காங்கிரஸ் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் யோக்யதை கிடையாது என்று பன்னிப் பன்னிப் பேசி வருவதைக் கேட்ட பிறகுதான் நான், சென்னை கூட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்டேன், வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளும் யோக்யதை இல்லையென்றால், எதற்காக 8 கோடி ரூபாய் செலவிட்டு, பொதுத் தேர்தல் நடத்துகிறீர்கள் என்று. உடனே 'பத்து ஆண்டுகளுக்கு முன்பே சஷ்டியப்த பூர்த்தி'யைக் கண்ட பேட்டையார் சே! சே! இதுகூடவா தெரியவில்லை! மக்களுடைய கருத்தை அறியத்தான் பொதுத்தேர்தல் நடத்துகிறோம் என்று பேசுகிறார். திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்துகிறார்.

> நாடாளும் யோக்யதை எந்தக் கட்சிக்கும் இல்லை என்ற பேச்சு, ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல என்பது என் வாதம்.

அதனைப் புரிந்துகொள்ள விடவில்லை, பதவி! எதை எதையோ பேசவைக்கிறது. எது பேசினாலும் 'ஜீரணமாகும்'—பதவி காரணமாக!!

சாதனைகளைக் கணக்கிட, மதிப்பிட, தேவையான சூழ்நிலை இல்லாதபோது, காங்கிரஸ் தன் சாதனைகளைப் படமாக்கினாலும் சரி, பாட்டு ஆக்கினாலும் சரி, அது பாதிக் கதையே தவிர, 'முழுவதும்' ஆகாது.

ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பைப் பெற மக்கள் இம்முறை முனைந்திருக்கிறார்கள் என்பது என் கருத்து.

மற்றோர் கட்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத நிலையிலும், இந்தச் சாதனைகளை மதிப்பிட, ஒரு வழி இருக்கிறது, என்ன அவ்வழி எனில், இவர்கள் அரசாண்டு வரும் இதே காலத்தில், பிற நாடுகளிலே அரசாள்பவர்கள் பெற்றுள்ள சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பிடலாம்.

அதற்கு அழைத்தாலோ, அவர்கள் அதெப்படி ஒப்பிடலாம்! வேறு நாடு! வேறு சூழ்நிலை! அந்த மக்களே வேறு! அவர்களுக்கு இருந்த சூழ்நிலையே வேறு! என்று பேசுகிறார்கள்; சிலர்; சில வேளைகளில்.

இவர்கள் குறிப்பிடுவனவற்றையெல்லாம் கணக்கில் வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து, இந்த நாட்டிலே இவர்கள் மூலமாகக் கிடைத்த சாதனைகளை மதிப்பிட்டவர்கள் என்ன கூறி இருக்கிறார்கள்? அவர்கள், ஆட்சியைப் பிடித்திட அலைபவர்கள் அல்ல! நாற்காலிப் பைத்யம் பிடித்தவர்கள் அல்ல!!

> **மேற்கத்திய நாடுகளைக்கூட கணக்கில் எடுக்காமல், புதிதாக விடுதலைபெற்ற கிழக்கத்திய நாடுகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு மதிப்புப் போட்டதில், இந்தோனீஷியா தவிர பிற எல்லா நாடுகளையும்விட, நம்நாடு எல்லாத் துறைகளிலும் ஒருசேர, பிற்போக்காக இருக்கிறது என்றும், இதே வேகத்தில் முன்னேற்றம் இருந்திடுமானால், ஜப்பான் அளவுக்கு இந்தியா வளம்பெற 130 ஆண்டுகளுக்குமேல் ஆகுமென்றும், புது டில்லியில் சில திங்களுக்கு முன்பு கூடிய, பல்வேறு நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.**

இதற்கென்ன சொல்லுகிறார்கள்? சாதித்தோம், சாதித்தோம் என்று சொன்னால் போதுமா? சாதித்திடும் திறமை இருந்தால். இவர்களைப்போலவே, ஏகாதிபத்தியப் பிடிப்பில் இருந்து விடுதலைபெற்று, சுதந்திர வாழ்வுபெற்று, ஆட்சி நடத்திய பல கிழக்கத்திய நாடுகள் பெற்ற வளர்ச்சியை ஏன் இங்கு பெற

(13-ம் பக்கம் பார்க்க)

வாக்காளர் சிந்தனைக்கு...

தேர்தல் அறிக்கை முரண்பாடுகள் நிறைந்ததவையாயிருக்கின்றன; முக்கியமானவை விடுபட்டுப் போயிருக்கின்றன; எதை முதலில் செய்ய வேண்டும், எதை பிறகு செய்யவேண்டும் என்பது பற்றிய வரிசைக் கிரமங்கள் தலைகீழாக இருக்கின்றன; உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். இதைத் திரும்பப் பெறுங்கள்; மக்களுக்குப் புரியும்படியான வகையில் மாற்றியமையுங்கள்!

விலைவாசி உயர்வு பற்றிய அடிப்படை விஷயங்களையே இந்த அறிக்கை மறந்துவிட்டிருக்கிறது. 1956ல் இருந்ததைவிட ஒரு டிராக்டரின் விலை 50 சதவீதம் உயர்ந்திருக்கிறது. உலகிலேயே இந்தியாவில்தான் உரங்களின் விலை மிக அதிகம். விவசாயிகளுக்கு, சாகுபடிக்குத் தேவைப்படும் பல சாதனங்கள்பற்றி அறிக்கை மௌனம் சாதிக்கிறது.

விலை உயர்வு விஷயத்தில் உங்களுக்கு (காங்கிரஸ் அரசுக்கு) எந்தப் பொறுப்பும் இல்லாதபடி பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நாம் வாயால் சொல்வதற்கும், செய்கையில் நடந்து கொள்வதற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

மாஜி கேரள கவர்னர் அஜித் பிரசாத் ஜெயின்
(எர்ணாகுளத்தில்)

2—18
அவளை நம்பிவிட்டான்!

கூட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அஞ்சலை, ஆவலோடு வாயிற்படியிலேயே பார்த்துக் கொண்டிருந்தாள். முரடர்களிடம் பொன்முடிப்பைக் கொடுத்துவிட்டு இங்கு வரவா அவனுக்கு இவ்வளவு நேரம் என்று யோசித்தவாறு, நெற்றியைத் தடவிக் கொடுத்தாள்.

'அஞ்சலை!' என்று அழைத்துக் கொண்டே உள்ளே நுழைந்தான், தூமகேது.

நாணிக் கோணி கடைக்கண்ணால் பார்த்து, அவள் முல்லைப் பற்கள் சிறிது தெரிய முறுவல் செய்தாள்.

அவளது புன்னகையையும் பூரிப்பு முகத்தையும் கண்டு, அவன் ஒருகணம் அப்படியே அசைவற்று நின்றுவிட்டான்.

"வஞ்சகனே! கிழக் குரங்கே! உன்னிடம் விளையாட நான் என்ன இழவியா! நெற்றியிலே நீறு, கழுத்திலே உருத்திராட்சம், உதட்டிலே சிவன் ...... உள்ளத்திலே காமம்! 'அண்ணனையும் கொன்றுவிட்டோம்! கேட்க இனி ஆள் கிடையாது' என்ற நினைப்பால், தைரியம் கொண்டு விட்டாயோ! பாண்டிய நாட்டுச் சோலையிலே நுழைந்து விட்ட கருநாகமே, உன் உயிரை இதோ போக்குகிறேன்......பெண்மையின் அழகைக் கண்டு நாகம் ஆடுகிறது! விஷவிருக்ஷமே, உன்னை வெட்டி வீழ்த்தாமல்விடப் போவதில்லை!' என்று அவள் நீல விழிகள் சிவப்படைய, குத்திக் கொல்ல வாளை ஓங்கிக்கொண்டு முன்பொரு இரவு வந்ததை, அவன் மறந்துவிடவில்லை. அதெப்படி அவனால் அதை மறந்துவிட முடியும். சைவத்தைப் பரப்பும் 'புனித காரியத்தில்' ஈடுபட்டு உடல் சோர்வடையும் நேரங்களில் எல்லாம், அஞ்சலை தானே அவன் அகக் கண்முன் தோன்றி, அவனது சோர்வைப் போக்கி வந்தாள்.

அஞ்சலை தன்னைக் கண்டு அச்சமோ அருவருப்போ கொள்ளாமல்—மலர்ந்த முகத்தோடும் மந்தகாசமான முறுவலோடும் இருக்கிறாள்—என்பதைக் கண்டதும், அவனுக்குப் பழைய நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது.

பொன்னையா கொல்லப்பட்ட அன்றிரவு, அவள் வீட்டிற்கு அவன் சென்றான் அல்லவா?

"அஞ்சலை! தூரத்திலேயே இன்னமும் ஏன் நிற்கிறாய், துடியிடையாளே! புஷ்ப விமானமே வா! அருகில் வா!" என்று அழைத்துக் கொண்டே அவளை நெருங்கினான்.

"அட அட! இருந்த இடத்திலேயே நில்லுங்கள்–இன்பத்தோடு நானே உமது பக்கத்தில் வருகிறேன்!' என்று அவள் மகிழ்ச்சியோடு கூறினாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்டு இதயத்தில் இன்பம் பொங்க, அவன் வாய் வர்ணனை வார்த்தைகளைச் சிந்த ஆரம்பித்துவிட்டது.

கடைசியில் வாளை எடுத்தபோது தான், அவ்வளவு நேரமும் அவள் பேசியது கேலி வார்த்தைகள் என்பது அவனுக்குப் புரிந்தது— திகைப்பு அதிகரித்தது.

அன்றுபோலவே இன்றும் அவள் முதலில் சாகசம் செய்கிறாளோ என்ற சந்தேகம் எழுந்ததும், நின்ற இடத்தைவிட்டு முன்னே ஒரு அடியும் எடுத்துவைக்காமல், 'மருதாயி! மருதாயி!' என்று பணிப் பெண்ணை உரத்தக் குரலில் அழைத்தான்.

"இங்கே அவள் எதற்கு?" என்று கேட்டுக்கொண்டே, அஞ்சலை கட்டிலைவிட்டுக் கீழே இறங்கினாள்.

"ஒன்றுமில்லை — ஒரு சிறு சந்தேகம்!" என்று அஞ்சலையைப் பார்த்துச் சொல்லிவிட்டு, திரும்பவும் 'மருதாயி! மருதாயி!' என்று ஒரு கல் தூரத்திற்குக் கேட்கும் விதத்திலே கூவியழைத்தான்.

"என்னாங்கோ, என்னையா கூப்பிட்டிங்கோ?" என்று கேட்டுக் கொண்டே, மருதாயி என்ற அந்தப் பணிப் பெண் உள்ளே வந்தாள்.

"உன்னை இல்லை, இந்த தூணைக் கூப்பிட்டேன்!" என்று அவன் எரிச்சலோடு சொன்னதும், அவள் அவ்விடத்தைவிட்டுப் போக ஆரம்பித்தாள்.

"மருதாயி! நில்! எங்கே போகிறாய்?" கோபத்தோடு அவன் கத்தினான்.

"மன்னிச்சிக்கோங்கோ, என்னைத்தான் கூப்பிடுறிங்களோ என்று வந்துவிட்டேன்!" என்று நடுங்கிக்கொண்டே மருதாயி சொன்னாள்.

"சனியனே, உன்னைத்தான் அழைத்தேன்! ஏன் தூரமாகவே நிற்கிறாய்—உன்னோடு கத்த யாரால் முடியும் — இப்படி வா!" என்று கைகாட்டி அழைத்ததும், அவள் நடுங்கிக்கொண்டே வந்தாள்.

"தரித்திரமே—நீ எதற்காகப் பயப்படுகிறாய்! நான் சொல்வது கேட்கிறதா?"

"பால் வேண்டுங்களா, இதோ கொண்டுவருகிறேன்!"

"ஏய்! ஏய்! நில்! பாலும் வேண்டாம் பழமும் வேண்டாம்!"

"பழங்கூட வேண்டுங்களா?"

"பாழாய்ப் போயிற்று போ! இதோ நிற்கிறாளே அஞ்சலை! அவள் வாளை எங்கேயாகிலும் உடலில் மறைத்து வைத்திருக்கிறாளா என்று தடவிப்பார்!"

"அம்மாவை வெளியில் கூப்பிட்டுப்போகணுங்களா?"

"அம்மாவை வெளியில் இல்லை, ஆகாயத்தில் கூப்பிட்டுக்கொண்டு போகச் சொல்கிறேன்! பெரிய இழவாய்ப் போய்விட்டது! இவளிடம் ஒரு வேலை வாங்குவதற்குள், பிராணனே போய்விடும்போலிருக்

கிறது!" என்று அவன் நெற்றியைப் பிடித்துக்கொண்டான்.

அவன் தவிப்பதைப் பார்த்துச் சிரித்தவாறு, பேசாமல் அஞ்சலை கட்டிலருகிலேயே நின்றிருந்தாள்.

பணிப்பெண்ணிற்கு விஷயம் விளங்கச் சிறிது நேரம் பிடித்தது. அதன் பிறகு, அஞ்சலையை நன்ருகத் தடவிப்பார்த்துவிட்டு, ஒன்றுமில்லை என்று கூறினுள்.

"சரி, நீ போகலாம்?"

"இன்னும் என்ன செய்ய வேணுங்கோ?"

"உன் தலையை வெட்டியெடுத்துக்கொண்டுவா! போ!"

"என்னுங்கோ?"

"இந்த இடத்தைவிட்டுப் போ! போ!" என்று தன் காதுகளை விரல்களால் மூடிக்கொண்டு, அவன் கத்திய பிறகே, மருதாயி வெளியே சென்ருள்.

"அஞ்சலை! உன்னைச் சோதனை செய்து பார்க்கச் சொன்னேனே என்று கோபங்கொள்ளாதே!"

இவ்வாறு கூறிவிட்டு, தூமகேது ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"இதிலென்ன கோபம்! அன்றிரவு நடந்தது இன்னமும் தங்கள் கவனத்திலிருக்கிறது என்பதை நான் தெரிந்துகொண்டேன்!"

"பெண்களே மிகவும் பொல்லாதவர்கள்!"

"ஆமாம், பார்வைக்கு மிகவும் வழவழப்பாகவும் அழகாகப் படமெடுத்து ஆடக்கூடியதுமான நல்ல பாம்பினிடத்தில்தானே, விஷமும் இருக்கிறது!"

"அதற்கு நான் சொல்லவில்லை ...."

"எதற்குச் சொன்னுலும், முதலில் ஆபத்து நேரிடாது என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொண்ட பிறகுதான், எந்தக் காரியத்தையும் செய்யத் துணியவேண்டும்!" என்று கைவளைகளைத் தடவிக்கொண்டே, குறும்போடு அஞ்சலை சொன்னுள்.

"அஞ்சலை! நீ மிகுந்த ஆத்திரத்தோடு இருப்பாய்! உள்ளே நுழைந்ததும், சீற்றங்கொண்ட புலியைப் போலப் பாய்வாய்! மானமரியாதை இல்லாமல் பேசுவாய்! என்றெல்லாம் எண்ணிவந்தேன்!......"

"வந்து பார்த்தால் பூத்ததாமரை போல முகம் மலர்ந்திருக்கிறது! பேச்சில் இனிமையும் கண்ணில் குளுமையும் இருக்கிறது...!"

"அஞ்சலை! நீ மகா குறும்புக்காரி!" என்று தோள்களைக் குலுக்கிக்கொண்டே கூறி, அவளை நோக்கிச் சென்ருன்.

"ஊம் ஊம்! வேண்டாம்! அப்படியே தூரமாகவே நில்லுங்கள்! அருகில் வரவேண்டாம்! வந்தால், மறைத்து வைத்திருக்கும் உடைவாளால் உமது மார்பில் குத்தினுலும் குத்திவிடுவேன்! ஏனென்ருல், நானொரு பெரிய கொலைகாரி! கொலைகள் செய்து, செய்து என் கையில் இரத்தக் கறை படிந்துவிட்டிருக்கிறது!

"உன் குறும்பு இன்னும் போகவில்லையே!"

"உடைவாள் ஏதுமில்லை என்பதைத் தெரிந்துகொண்டதினுல் மட்டும், தைரியங்கொண்டுவிடாதீர்கள்!" ஆபத்து என்பது உடைவாளின் முனையில் மட்டும் இருப்பதில்லை! இது எவ்வளவு பெரிய அறை?"

"அறை பெரியதாக இருப்பதினுல்?"

"சுற்றிலும் எத்தனைப் பட்டுத் திரைகள் உள்ளன!"

"ஆமாம் இருக்கின்றன, அதனுல் என்ன?"

"மரத்தின் கிளைமீது உட்கார்ந்திருந்த மணிப்புருவைப் பார்த்து, அதை அடையவேண்டும் என்ற ஆசையினுல் ஒரு வேடன் வில்லை வளைத்து, அம்பைத் தொடுத்துக் குறிபார்த்தானும்! அவன் மனதல், அந்நேரத்தில் என்னென்ன எண்ணங்கள் தோன்றியிருக்கும்? ககனத்தே பறக்கும் இந்த அழகான மணிப்புரு, இன்னும் சிறிது நேரத்தில் நம் கையிலிருக்கப்போகிறது என்றுதானே எண்ணி எக்களித்துக்கொண்டிருப்பான்? அப்படிக் குறிபார்த்துக் கொண்டிருந்தபோது, பக்கத்திலிருந்த புதரிலிருந்து ஒரு நாகப்பாம்பு மெள்ள வந்து அவன் காலில் கடித்துவிட்டதாம்! ஏதோ காலில் கட்டெறும்பு கடிக்கிறதுபோலிருக்கிறதே என்று அவன் குனிந்து பார்த்தானும்! கடித்தது பாம்பு என்பதைக் கண்டதும், ஆய்யோ என்று அலறிவிட்டானும்! அந்தச் சப்தத்தைக் கேட்டுப் புருவும் பறந்தோடிவிட்டதாம்! அந்த வேடனின் நிலைமை என்ன? புருவுக்கும் புரு பறந்தோடிவிட்டது — போதாததற்குக் காலில் விஷப்பாம்பு வேறு கடித்து, உயிருக்கே ஆபத்து உண்டாகிவிட்டது!"

"இந்தக் கதை எனக்கும் தெரியுமே அஞ்சலை!"

"கதை தெரிந்திருந்தால் மட்டும் போதுமா, தக்க நேரத்தில் அந்தக் கதையின் கருத்து நினைவிற்கு வர வேண்டாமா? அதுசரி, அந்தக் கதையின் கருத்து என்ன?'

"குரு மாணுக்கனைக் கேட்டதைப்போலக் கேட்கிருயே! என்ன கருத்து — சாதாரணமான கருத்துதான்! அக்கிரமம் செய்கிறவன் அழிந்துவிடுவான்—அதுதான் அந்தக் கதை போதிக்கும் நீதி!"

"அப்படியா? இன்னெரு கதை-தங்களுக்குத் தெரிந்ததையே சொல்கிறேன்! அதுவும் நம் புராணத்தில் உள்ளதையே கூறுகிறேன்! கானகத்தின் வழியே சென்றுகொண்டிருந்த ஒரு பார்ப்பனப் பெண், வெயில் கொடுமை அதிகமாக இருக்கவே, மரத்தின் நிழலில் படுக்கிருள்! அப்படியே நன்ருகத் தூங்கியும் விடுகிருள்! யாரோ ஒரு வேடனுல் எப்பொழுதோவிட்ட ஒரு அம்பு, அந்த மரத்தின் இலைகளில் தொத்திக்கொண்டிருக்கிறது! காற்று சிறிது வேகமாக வீச, அந்த அம்பு கீழே விழுகிறது—தரையில் அல்ல —தன்னந்தனியாகத் தூங்கும் அந்த மாதின் மார்பைப் பார்த்து! உடனே அவள் இறந்துவிடுகிருள்! அதன்பின் நடக்கின்றன — பல! அதெல்லாம் இப்பொழுது நமக்கு வேண்டாம்! இந்தக் கதையின்படி பார்த்தால், மரத்தின் நிழலில் படுத்து உறங்கும் பெண்கள் அழிந்துவிடுவார்கள் என்று சொல்லிவிட வேண்டியதுதானு!"

"எங்கேயாகிலும் அப்படிச் சொல்லலாமா—கூடாது! தெய்வாதீனமாய் நடந்தது அது!"

இப்பொழுது
நம்நாடு
படிக்கிறீர்களா?

ஆண்டுச்சந்தா ரூ. 27-00
ஆறுமாதம் " " 13-50
மூன்றுமாதம் " " 6-75

நம்நாடு
சென்னை-13

"ஏன் வேடனை மட்டும் பாம்பு கடித்தது தெய்வாதீனம் என்று சொல்லக்கூடாது? ஒன்றுக்கு நீதியும், மற்றொன்றுக்குத் தெய்வச் செயலும் கற்பிப்பது கூடாது!"

"வேண்டுமானால், அஜாக்கிரதையாகப் படுத்துத் தூங்குவது ஆபத்து என்ற நீதியை அக்கதை போதிக்கிறது என்று சொல்லலாம்!"

"இப்போது சொன்னீரே இது சரி! தூங்குவது தவறல்ல—ஆனால் இடம் பார்த்து ஜாக்கிரதையாகத் தூங்கவேண்டும் அப்படித்தானே"

"ஆமாம்!"

"அந்த வேடனின் கதையிலிருந்து அப்படிப்பட்ட கருத்தைத்தான் நான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறேன்! அதாவது, வேட்டையாடுவது தவறல்ல—ஆனால் இடம்பார்த்து ஜாக்கிரதையாக அதைச் செய்ய வேண்டும்!

"அஞ்சலை, எதற்காக நீ இதையெல்லாம் சொல்கிறாய் என்றே எனக்குப் புரியவில்லை!"

"நான் எப்படியிருக்கிறேன்?"

"சுருக்கமாகச் சொன்னால், தேவலோக அழகிகளைவிட, ஆயிரம் மடங்கு அதிக அழகாக இருக்கிறாய்!"

"அழகான ஒரு பெண்ணிடம் தாங்கள் சிரித்துப் பேசி சிந்தை குளிர வருகிறீர்! அல்லவா?"

"இது அக்கிரமம், அநீதி என்று சுட்டிக்காட்டத்தான், இவ்வளவு தூரம் சுற்றி வந்தாயா?"

"எது அக்கிரமம், அநீதி? யார் சொன்னது? எப்படிச் சொல்ல முடியும்? தேவரும் மூவருமே இப்படிப் பல பெண்களைப் பலவிடங்களில்செய்திருக்கிறார்களே! அக்கிரமமோ அநீதியோ இதுவென்றால், அவர்கள் செய்திருப்பார்களா?"

"குறும்பு போதும் அஞ்சலை!"

"குறும்பு நான் பேசவில்லை! நிலைமையைச் சொல்கிறேன்! தாங்கள் என்மீது ஆசைகொண்டதும், அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளத் துடிதுடித்து நிற்பதும் அக்கிரமமோ அநீதியோ அல்ல—வேடன் புறா மீது விருப்பப்பட்டதும், அதற்காக வில்லெடுத்து அம்பு தொடுத்ததும்போல! ஆனால் பக்கத்தில் புதர் இருக்கிறதே, அதிலே ஏதாவது சர்ப்பமிருக்குமோ என்று யோசித்துப் பாராக்காததினால்தானே, அந்த வேடனுக்கு ஆபத்து உண்டாயிற்று! அதுபோலத் தாங்களும்—..."

"நானும்?"

"பட்டுத் திரைகள் பல உள்ளனவே இந்த அறையில், அவைகளின் பின்னால் யாராவது ஒளிந்திருந்து, ஆசைக் இனியவளின் அருகே நெருங்கும்போது, ஓடி வந்து குத்திவிட்டால் என்ன செய்வது என்று ஒரு கணம் யோசித்துப் பார்க்க வேண்டாமா?"

"அந்த யோசனையும் பயமும் எனக்கு வேண்டாம்! ஏனென்றால், இந்த மாளிகையினுள்ளே காற்றுக்கூட, எனது காவலாளர்களின் அனுமதியில்லாமல் உள்ளே நுழைய முடியாது! — அஞ்சலை, நீ புத்தபுரத்திற்குச் சென்று, அதிகமாகப் பேசக் கற்றுக்கொண்டாய்!"

"அப்படியா?"

"ஆமாம், அங்கு நீயும் அரசன் குலசேகரனும்கூடச் சந்தித்துப் பேசினீர்கள் என்று கேள்விப்பட்டேன்!'

இதைக் கேட்டதும் அஞ்சலையின் மனம் திடுக்கிட்டது. ஆனாலும் அகத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியை முகத்தில் காட்டாதபடி தன்னைச் சமாளித்துக் கொண்டாள். அவனுக்குத் தெரிந்த உண்மையை வைத்தே அவனை ஏமாற்ற வேண்டும் என்ற முடிவோடு, தரையைப் பார்த்தபடி நின்றாள்.

"உனக்குப் பேச, அவன் கற்றுக்கொடுத்திருப்பானே, நிறைய!"

"ஆமாம்! புத்தபுரத்தில் பேச மட்டுமல்ல; தங்கள் விருப்பத்திற்கு இணங்க வேண்டிய அவசியத்தையும் தெரிந்துகொண்டேன்!' என்று அவனைப் பார்த்து நாணத்தோடு சொல்லிவிட்டு, விழிகளை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"நீ என்ன சொல்கிறாய்' அஞ்சலை?"

"அஞ்சலை தங்கள் பகைவள் அல்ல, பாசத்தவள் என்கிறேன்!"

"அப்படியா?"

"ஆமாம்! இதைக்கூடத் தாங்கள் சாகசமென்று நினைத்தாலும் நினைப்பீர்கள்!"

"என்னால் நம்பமுடியவில்லையே"

"உம்மால் மட்டுமா, என்னால் கூடத்தான் நம்பமுடியவில்லை — அஞ்சலையா இப்படி மாறிவிட்டாள் என்று! 'குலசேகரனுக்கு உன்னை மனைவியாக்கி விடுகிறேன்! என் சொல்லை அவன் ஒருநாளும் தட்டமாட்டான்! ஒரு முறை நீ என் இச்சைக்கு இணங்கினால் போதும்—பார் அந்தப் பாண்டியனை—உன் பாதங்களில் விழுந்திருக்கும்படிச் செய்கிறேன்!' என்று தாங்கள் அன்றிரவு கூறினீர்கள் அல்லவா?"

"ஆமாம்! நாடற்றவனே, நல்ல பண்பு அற்றவனே" தெரியுமா உனக்குத் தமிழ்ப் பண்பு; கண்ணகி நான்; திரௌபதியின் இனத்தில் பிறந்தவள் அல்லள்—இப்படி ஏதேதோ நீ ஆத்திரத்தோடு சொன்னதும் நினைவிருக்கிறது!"

(16-ம் பக்கம் பார்க்க)

ஏழையர் இதயத்தில் என்சொல் பதிகிறது!

9-ம் பக்கத் தொடர்ச்சி

முடியவில்லை? திறமைக் குறைவுதானே காரணம்? பொருத்தமான திட்டம் இல்லாததுதானே காரணம்?

அந்த ஆய்வாளர்கள் கணக்கில் எடுத்துக் கொண்ட எந்த நாட்டிலாகிலும் போட்ட திட்டங்கள், ஏழைகளுக்குப் பலன் அளிக்கவில்லை; பணக்காரர்களுக்கே அந்தப் பலன் போய்ச் சேர்ந்தது என்று கூறிக் கைபிசைந்துகொள்கின்றனரா?

இங்குதானே, காமராஜரே கூறுகிறார், "ஆமாம்! திட்டத்தின் பலன் ஏழைக்குக் கிடைக்கவில்லை" என்று; வேறு யாரோ, திட்டத்தை நடத்தியதுபோலவும் இவர் வேறு மண்டலங்களிலே சஞ்சரித்துவிட்டு இப்போதுதான் இங்கு வந்திருப்பதுபோலவும்!!

சமைக்கவே தெரியாதவள்; அவள் தயாரித்த சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு, கணவன் சலித்துப் போனான்; முகத்தைச் சுளித்துக்கொண்டான். அப்போது அவள் சொன்னாளாம், "நான் சமைப்பது நன்றாகத்தான் இல்லை! எனக்கேகூடத்தான் பிடிக்கவில்லை. அதற்காக நான் உங்களைப்போலவா முகத்தைச் சுளித்துக்கொள்கிறேன்" என்று.

அது, கணவன்-மனைவி கதை! இவருமா அதுபோலப் பேசுவது,

ஆமாம்! திட்டத்தின் பலன், ஏழைக்குக் கிடைக்கவில்லை. எனக்கேகூடத்தான் தெரிகிறது. ஆனால் அதற்காகக் குறைகூறுவதா! நான் குறை கூறுகிறேனா?

என்று. ஆனால் பேசுகிறாரே! அதைச் சாதனை என்றும் காட்டுகிறாரே! ஆய்வாளர்களோ, வேறு எந்த நாட்டிலும் இல்லை, இந்தஅளவுக்குத் திறமைக்குறைவு என்கிறார்கள்.

இத்தகைய ஆய்வுரைகளை உரைகல்லாகக் கொள்ளலாம், இவர்களின் சாதனைகளை மதிப்பிட!

இந்த முறையிலே மதிப்பிடத் தேவைப்படும் அரசியல் தெளிவு அதிக அளவில் இங்கு இல்லை என்ற ஒரே தைரியத்திலா, இத்தனைப் பகட்டமாகப் பேசிக்கொண்டிருப்பது!

நான், தம்பி! நமது நாட்டு மக்களுக்கு அரசியல் தெளிவு வளரவில்லை என்ற எண்ணம் கொண்டவன் அல்ல. தெளிவு இருக்கிறது அது வளர்ந்துகொண்டும் வருகிறது என்று நம்புகிறேன்.

அந்த நம்பிக்கையுடனேயே மக்களை அணுகி, கழகக் கருத்தைக் கூறி வருகிறேன்.

சாதனைகளைக் கணக்கில் எடுங்கள் — மற்ற இடங்களின் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் — அப்போதுதான் உண்மையான மதிப்பீடு தெரியும் என்று கூறிவருகிறேன்.

என் சொல் அவர்களின் செவி புகாமலில்லை.

அவர்கள் இதயத்திலே உண்மை பதியாமலில்லை.

பிறநாடுகளுடன் ஒப்பிடவும் மனம் இல்லையென்றால், தம்பி! இவர்களின் சாதனைகளை மதிப்பிட மற்றும் ஓர் வழி இருக்கிறது இதற்காவது இவர்கள் இணங்குகிறார்களா என்று பார்த்தால், காணோம்.

இவர்கள் காட்டும் சாதனைகளை, இவர்கள் செய்தளிப்பதாகச் சொன்ன சாதனைகளுடன் ஒப்பிட்டுக் காட்டி, எந்த அளவு வெற்றி கிட்டிற்று என்பதையாவது கணக்கில் எடுக்கக் கூடாதா? அது ஒரு விதமான மதிப்பீடாக இருக்குமே! செய்வார்களா? செய்தார்களா? இல்லையே!

உணவுப் பிரச்சினை பற்றிய, ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் போதும், என்னென்ன சாதிப்பதாகச் சொன்னார்கள்? இன்று அந்த முறையிலே இவர்கள் பெற்றுள்ள சாதனை எப்படிப்பட்டது? எலியைக் காட்டி, எமது வேலை முடிந்தது என்று சொல்லும் அளவுக்கு அல்லவா ஆகிவிட்டது.

இதுவரையில், ரூபாய்க் கணக்கிலே உணவுப் பொருள் விலைக்குக் (கடனுக்கு) கொடுத்துக் கொண்டு வந்த அமெரிக்கா, இனி டாலர்தான் தரவேண்டும் என்று சொல்லி நிர்ப்பந்தப்படுத்தும் நிலை வந்திருக்கிறதே. இது சாதனைக்குச் சான்றா?

கடன் கொடுக்கத் தயக்கமாக இருக்கிறது; ஏனெனில் கடனைத் திருப்பித் தந்திடும் சக்தி இந்தியாவுக்கு இருக்கிறதா என்பதிலே எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்று ஜப்பானிய பொருளாதார நிபுணர்கள் கூறிவிட்டிருக்கிறார்களே. இது சாதனைக்குச் சான்றா?

ரூபாயின் மதிப்பைக் குறைத்தாலொழிய நெருக்கடியைச் சமாளிக்க முடியாது என்று இவர்களே கூறிவிட்டார்களே? சாதனைக்குச் சான்றா?

ஜனநாயக சிந்தனை!

சில ஆர்ப்பாட்டங்கள் அமைதியான முறையில் நடக்கக்கூடும்; அமைதியாக நடக்கிறது என்பதற்காக மட்டும் அதனைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. பிறரை உருட்டி மிரட்டவும், உரிமைகளில் குறுக்கிடுவதாகவும் உள்ள எந்த ஆர்ப்பாட்டங்களையும் அனுமதிக்க முடியாது.

--நந்தா.

[எர்ணாகுளம் மாநாட்டில்]

புகழ் இருந்தால் மட்டும் போதுமா?

செல்வம் — வருவாய் — ஒரு சிலரிடம் சிக்கிக்கொண்டது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனரே — இது சாதனைக்குச் சான்ரு?

இல்லை! இல்லை! இல்லை! — என்று ஏழையின் இதயம் கூறுகிறது. இதை மாற்ற, அவர்களை மயக்கத்தில் ஆழ்த்த, வளைவுகள், வண்ணங்கள், உலாக்கள் உற்சவங்கள், பேரணிகள், முழக்கங்கள்! இவை போதாவென்று படங்கள்!!

புனுகு பூசுகிருர்கள், புண் மறையும் என்று!!

அதிலே மிகவும் மணமுள்ளது என்ற நினைப்புடன் காமராஜர் புகழ் பாடுகிருர்கள். அது போதும், மக்களை மயக்க என்று!

இரண்டு நாட்களுக்கு முன்பு, ஜெர்மன் நாட்டவர் ஒருவர் வந்து பேசிக்கொண்டிருந்தார். இந்தப் பிரச்சினை எழுந்தது. நான் சொன்னேன்,

> எங்கள் நாட்டில் இப்படி ஒருவரை புகழ் பாடி பூஜிக்கும் பழக்கம் நெடுங்காலமாக இருந்துவருகிறது. ஆனால், அதே மக்கள் தங்கள் இன்னல் போகவில்லை என்று தெரியும்போது 'பூஜா விக்ரஹங்களை'த் தூக்கிப் போட்டுவிடுவார்கள். இதுவும் நெடுங்காலமாக இங்கு இருந்து வருவதுதான் என்று கூறினேன்.

தம்பி! நேருவைப் போலக் காமராஜரை வடிவம் கொள்ளச் செய்திடுவோம்; அந்த வடிவத்தைக் கண்டு, மக்கள் மயங்கிடும் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஓட்டுகளைப் பறித்துக் கொள்வோம் என்று கருதுகின்றனர்.

> நெடுங்காலமாக யாராவது ஒரு வடநாட்டுக்காரரே பெருந் தலைவராக—உற்சவ மூர்த்தியாக—இருந்துவருகிருர் என்பதிலே தென்னுட்டவருக்கு இயல்பாகவே இருந்துவரும் மனக்குறையை காமராஜரை அகில இந்தியப் பெருந்தலைவர் ஆக்குவதன் மூலம் போக்கிக் கொள்ளலாம் என்ற ஆசைகூட உலவிக் கொண்டிருக்கிறது.

ஆனால் ஒரு தலைவரின் புகழ் பாடி, ஒரு கட்சியோ, அதனால் நடத்தப்படும் ஆட்சியோ, மக்களுக்கு என்றென்றும் மயக்கத்தை ஊட்டிட முடியாது.

> சுகர்ணோவின் புகழ் பாடப்பட்டதை விடவா!
>
> கனு நாட்டு அதிபர் நிக்ருமாவின் புகழ் பாடப்பட்டதை விடவா!

இவர்கள், அந்த நாட்டு மக்களால் மட்டும் அல்ல, வெளிநாட்டு மக்களாலும் பாராட்டப்பட்ட நிலையில் இருந்தனர். முன்பு! இப்போது? இவர்கள், அடிக்கடி நிலைமை மாறக்கூடிய ஜனநாயகச் சூழ்நிலையில்கூட அல்ல, 'ஒரே கட்சி' என்ற கவசம் அணிந்துகொண்ட நிலையில் இருந்துவந்தனர்! அவர்களே, மக்கள் தெளிவு பெற்று சீறி எழுந்தபோது, நிலைகுலைந்து போயினர்.

ஒரு நாட்டு ஆட்சியிலே என்ருலும் சரி, ஒரு கட்சியிலே என்ருலும் சரி, புகழ் மிக்க இடம் கிடைத்துவிட்டால் மட்டும் போதும், அது என்றென்றும் அவர்களை 'வல்லவர்களாக' வைத்திருக்கும் என்று கூறிவிடவும் முடியாது.

> சந்தனம், பூசிக்கொள்ளப்பயன்படும், தாக விடாய் தீர்க்க அல்ல.
>
> கடுகு, தாளிக்கப் பயன்படும், அதனையே தின்றுகொண்டிருக்க முடியாது.
>
> பெருங்காயம், குழம்புக்கு மணமளிக்கும்; அதனையே கரைத்துக் குடித்துக்கொண்டிருக்க முடியாது.

ஆலை, காங்கிரசார், கர்மராஜரின் புகழ் பாடினல் போதும், மக்கள் தமது மனக்குறை எல்லாம் தீர்ந்து போய்விட்டதாகக் கருதிக்கொள்வார்கள் என்று நம்புகிருர்கள்.

> அவருக்கே அந்த நம்பிக்கை வந்து விட்டதாகவும் சொல்லுகிருர்கள்!

புகழ் பொழியப் பொழிய, ஒருவிதமான மனமயக்கம், புகழ் பெறுபவர்களுக்கு ஏற்பட்டுவிடும். ஏற்பட்டு விடும்போது அவர்கள் தம்மைப் பற்றிப் போடும் கணக்கு, நாளாவட்டத்தில்—உடனே அல்ல—பொய்த்துப் போகும். அதிலும், பலனை எதிர்பார்த்து, செய்யப்படும் அர்ச்சனைக்கு மயங்கிவிடுவது மிகவும் ஆபத்தை மூட்டிவிடக்கூடும்.

> அதனுல்தான் ஆன்ருேர் ஒருவர், கழுகு பிணத்தைத்தான் கொத்தித் தின்னும், 'முகஸ்துதி' செய்பவர்கள் உயிருடன் இருக்கும்போதே கொத்தித் தின்பார்கள் என்று கூறி, எச்சரித்தார்.

நெடுங்காலத்திற்குப் பிறகு, தமக்குக் கிடைத்துள்ள 'புகழ்'—'நிலை' — செல்வாக்கு காமராஜருக்கு, ஒரு மயக்கத்தைத் தந்திருக்கிறது என்பது, அவருடைய பேச்சிலேயே தெரிகிறது; எதிர்க்கட்சிகளை ஏசுவதிலும், மக்கள் படும் இன்னலைப்பற்றி அக்கறையற்றுப் பேசுவதிலும், புரிகிறது. இந்த நிலையை அவருடைய கட்சியே எத்தனை நாளைக்குத் தாங்கிக்கொள்ளப் போகிறது என்பது, அலட்சியப்படுத்த முடியாத ஒரு கேள்வியாகும். இவர்மீது பொழியப்படுவதைக் காட்டிலும் மிக அதிகமான அளவு புகழ் பொழியப்படும் நிலையில் இருந்த தலைவர்கள், திடீரென்று, தமது கட்சியினராலேயே, 'கைகழுவி' விடப்பட்ட காதைகள், நிரம்ப உள்ளன; கருத்துள்ளவர்கள் பாடம் பெற்றிடலாம்.

> எல்லோராலும் விரும்பத்தக்க ஒரு திறனமான தலைவர். அவரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்ற அமெரிக்கர்கள் அவர் ஒரு சிறந்த மனிதர் என்பதை ஒப்புக்கொள்வார்கள். இதை யாரும் மறுப்பதற்கில்லை.

இவ்விதம் புகழ்ந்தார், அமெரிக்க குடிஅரசுத் தலைவர் அயிசனவர்; செப்டம்பர் 29; 1959-ல்.

புகழ்ந்தவர்களே புதைக்கவும் செய்வர்!

> அவருடைய குரல் உண்மையிலேயே சமாதானத்தின் குரலாகும்.

என்று நெஞ்சு நெக்குருகப் பேசினர் கன நாட்டு அதிபர், *1961, ஜுலை 24-ம் நாள்.*

> அவர் சாதாரண மனிதரல்ல! அவர் மிகவும் ஆற்றலும், அஞ்சா நெஞ்சமும், ராஜதந்திர அனுபவமும், உறுதியும் படைத்தவர்.

இவ்விதம் புகழ்பாடினர், பின்லந்து ஜனதிபதி *1963, டிசம்பர் நாலாம் நாள்.*

> **அறிவுக் கூர்மையும், விஷய ஞானமும், திட சித்தமுமுள்ள மனிதராகக் கருதுகிறேன். மேலும் அவரது நாட்டைத் தலைமைதாங்கி நடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் படைத்த ஒரே மனிதர் அவர்தான்!**

என்று அமெரிக்க தொழிலதிபர் ஒருவர் புகழ்ந்து பேசினர்—*1964 ஜனவரி 8.*

> **மேதாவிலாசமும் நிதானமும், விடாமுயற்சியும் மிக்கவர். அதோடு விழிப்புணர்வும் அசைக்க முடியாத உறுதியும் படைத்தவர்**

என்று புகழ்ந்தார் அமெரிக்க இதழ் அதிபர் ஒருவர்—*1959 பிப்ரவரி 22ல்.*

> **அவர் மக்கள் மத்தியில் இருந்து வந்தவராதலால், ஜனரஞ்சகமான ஞானத்தை அறிவார்**

என்று ஜப்பானிய பத்திரிகையாளர் ஒருவர் புகழ்ந்து எழுதினர்—*1963 டிசம்பர் 27ல்.*

> **அவரது விவேகத்தையும் பெருந்தன்மையையும் புகழ்வதற்கு உண்மையில் எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.**

தத்துவப் பேராசிரியர், பெர்ட்ராண்டு ரசல், 1962 அக்டோபர் 28ல் இதுபோலப் புகழ்ந்துரைத்தார்.

இவ்வளவும், யாரைப்பற்றி தெரியுமா, தம்பி! இன்று எல்லாம் இழந்து எவருடைய பார்வையிலும் படாமல் இருந்து வரும் குருஷேவ் பற்றி!

அதிபராக இருந்தபோது இத்தனைப் புகழ்மாலைகள்! இவ்வளவு புகழ் கிடைக்கும்போது, நமக்கென்ன குறை, என்றென்றும் நாம்தான் அதிபர், நாம்தான் தலைவர் என்றுதானே குருஷேவ் எண்ணிக்கொண்டிருந்திருப்பார்!

அத்தனைப் புகழும், அவரைக் காப்பாற்றிற்று? இல்லையே!

அத்தனைப் புகழ்மாரி பொழிந்தவர்களும், அவருக்கா இந்தக்கதி என்று ஒரு வார்த்தை கேட்டிட முன்வந்தனரா? இல்லையே!!

ஆகவே புகழ் பொழியப்பட்டால் போதும், நமக்கு அசைக்க முடியாத நிலை என்றென்றைக்கும் உண்டு என்று யாரும் இருந்துவிடமுடியாது; கூடாது.

பெறுபவர் நிலை எப்படியாயினும், ஒரு தலைவர் பெற்றுவிடும் புகழ், மக்களுக்கு, செவிக்கு உணவு; அதுவும் சிறிது காலத்துக்கு!

மக்கள், வாழ்வு கேட்கிறார்கள்; உழைத்துவிட்டு!

கேட்பது ரொட்டி! கிடைப்பது கல்!—என்றார்கள் கவிக்குயில் சரோஜனி அம்மையார்.

புசித்திட மக்கள் உணவு கேட்கிறார்கள்; புகழ் புசித்து அவர்கள் வாழ்ந்திட இயலாதே!!

அவர்கள் வாழ்வு கேட்கிறார்கள்; வண்ணப் படங்கள் அல்ல!!

படம் காட்டி, மக்களை, மயக்கிட முனைகிறார்கள்! நாமும் படம் எடுக்க முடியும் தம்பி! மக்கள் கண்டு உண்மையை உறுதியாக உணர்ந்திட மட்டுமல்ல, ஊராளும் காங்கிரசாரே, பார்த்துவிட்டு, உண்மை தானே! உண்மைதானே! என்று கூறிக் குமுறிடும்நிலை பெற்றிடக் கூட.

ஐயோ! உன் மகனை—
என் மகனை......
அநியாயக்காரப் பாவிகள்'
பாவிகள்!......
சுட்டுக் கொன்றுவிட்டார்களடி அம்மா!
அய்யய்யோ! என் மகனையா...
எங்கே! எங்கே!...

தம்பி! மொழிக் கிளர்ச்சியின்போது மூண்டுவிட்ட விரும்பத்தகாக நிலைமையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனைப் பெற்றெடுத்த தாய், சேதி கேட்டு, துடியாய்த் துடித்து, எங்கே! எங்கே! என்று அலறி ஓடிடும் காட்சி போதாதா!! அனுமதி கிடைக்குமா! ஒரு ஐம்பது அடி; இந்தக் காட்சி!!

தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!
இந்தி ஆதிக்கம் ஒழிக!
இந்தியை எதிர்த்து செந்தீயில் சாகிறேன்!

இந்த முழக்கம்! ஒரு தீக் குளிப்புக் காட்சி! கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் இயலாமல் மக்கள் திகைத்து நிற்பது! எடுத்துக் காட்டவிடுவார்களா!

படம் எடுக்கிறார்களாம், படம்! சாதனைகளை விளக்கிட!

சாதனைகள்தான், ஏழையின் முகத்தில் கவலைக் கோடுகளாகப் பதிந்து கிடக்கின்றனவே'! படம் வேறு வேண்டுமா!!

அண்ணன்,

அண்ணாதுரை

12-ம் பக்கத் தொடர்ச்சி

"ஆமாம் அன்று ஆத்திரம் மட்டுமல்ல, அப்படிச் சொன்ன உங்கள் நாவைத் துண்டித்துவிடவேண்டும் என்றுகூட நினைத்தேன்! தங்களுக்குப் பயந்து மதுரையைவிட்டு நான் சென்ற பிறகு, அனுபவித்த துன்பமும் துயரமும் சொல்லி முடியாது! கண்ணீர் வடிக்கும் நேரங்களில் எல்லாம தங்கள் நினைவுதான் எனக்கு வரும்! ஒரே ஒருமுறை என்றாரே, ஏன் அதற்குச சரியென்று சொல்லியிருக்கக்கூடாதென்று, என் மனமே என்னை இடித்துக்கேட்கும்! புத்தபுரத்தில் பாண்டிய மன்னரைக் கண்டேன்! அவர் பார்வையும் பேச்சும், என் மனதைக் கவர்ந்துவிட்டன! அத்தகைய உத்தமரை அடைய என்ன வேண்டுமானாலும் செய்யலாமே என்ற துணிவு எனக்குப்பிறந்தது! தங்களை எப்பொழுது காணப்போகிறோம்-உள்ளத்தைத் திறந்து காட்டப்போகிறோம் என்று துடிதுடித்துக்கொண்டிருந்தேன்!"

அவள் பேச்சை அவன் நம்பிவிட்டான். எப்படி நம்பாமலிருக்க முடியும், அந்த சேல் விழியாள் தான் அவ்வளவு நயத்தோடு சொன்னாளே!

"அஞ்சாதே அஞ்சலை, அவனை உனக்கு கணவனாக்கிவிடுகிறேன்!"

"பெருமூச்சு விடாதீர்கள்—அப்படி ஒரு சூழ்நிலையை உண்டாக்கி, அதிலே வெற்றி கிடைப்பது நிச்சயம் என்பது என் மனதிற்கு நன்றாகத் தெரிந்த பிறகு, இந்த அஞ்சலை தங்கள் மடியில் கிடப்பாள்!"

"இப்பொழுது!"

"ஆயாசமோ அவசரமோ எதற்கு—நான்தான் சொல்லிவிட்டேனே. இந்த உடல் தங்களுக்குக் காணிக்கை என்று! முதலில் அரசரிடம் என்னைப்பற்றிப் பேச்சு எடுத்து, அவர் சரி என்று சம்மதித்ததும், நேராக வாருங்கள்! இந்த இளங்கன்னி தங்களுக்கு இன்ப விருந்தாகத் தயாராக இருப்பாள்!"

"இன்னுமொரு சந்தேகம்!"

"கேளுங்கள்!"

"கானகத்தின் ஓரத்தில் யாரோ ஒருவனோடு நீ பேசிக்கொண்டிருந்தாயாமே யார் அவன்?"

"பாவம், யாரோ வழிப்போக்கன்! கொஞ்சம் இரக்கமான உள்ளங்கொண்டவன்! என் கதையைச் சொன்னேன்— அழுதுகொண்டே; அஞ்சாதே, ஆபத்து இனி உன்னை அண்டாது என்று அபயமளித்தான்!"

"பாவம் இந்நேரம் எந்த துஷ்ட மிருகத்திற்கு இரையானானோ?" என்று சொல்லி, தூயகேது சிரித்தான்.

காட்டு விலங்கினால் இளந்திரையனுக்கு ஏதாகிலும் ஆபத்து நேரிட்டிருக்குமோ என்று நினைத்துப் பார்த்ததும், அஞ்சலையின் முகம் வாடிவிட்டது. அவள் எங்கிருந்து அறியப்போகிறாள், அவன் அந்நேரத்தில் ஏரிக்கரையின் மீது உட்கார்ந்திருந்ததை!

ஏரிக்கரையின் மீது உட்கார்ந்திருந்த இளந்திரையன், அன்றிரவை அதே இடத்தில் கழித்துவிட்டு, மறுநாளும் அஞ்சலையைத் தேடப் புறப்பட்டான்.

ஒருமாத காலமாக அந்தச் சுற்றுப்புற ஊர்களில் எல்லாம் தேடிப் பார்த்தும், அஞ்சலை இருக்கும் இடத்தை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. எந்நேரமும் அஞ்சலை அஞ்சலை என்றே அவன் மனம் ஏங்கியது-கண்கள் தேடின.

அவன் மட்டுமா அஞ்சலையை எண்ணிக் கவலையடைந்தான் — சிறையில் அடைபட்டிருந்த சோலையப்பனுந்தான் கவலையடைந்தான்.

அறிவொளி அடிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பிய மாரிமுத்து அஞ்சலையை யாரோ கயவர்கள் தூக்கிச் சென்ற செய்தியை வந்து சொன்னான்.

அன்றுமுதல் தன் நிலையைக்கூட அவன் மறந்துவிட்டு அடிக்கடி அவளைப்பற்றியே எண்ணி ஏங்கினான்.

அன்றும் அவன் அந்த ஏக்கத்தில் மூழ்கியிருந்தபோதுதான் எதிரிலிருந்த படிகளின் வழியாக யாரோ கீழே இறங்கிவரும் சப்தம் கேட்கவே அப்பக்கத்தில் பார்த்தான்.

தூமகேது சிரித்த முகத்தோடு வந்துகொண்டிருந்தான்.

"மதுரைக்குத் திரும்பிவிட்டானே தூமகேது! இந்தச் சிறையினின்றும் இனி நம் எங்கிருந்து தப்பப்போகிறோம்" என்றெண்ணி அவன் ஏக்கத்தோடு தூமகேதுவைப் பார்த்தான்.

(வளரும்)

விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும்செப்டம்பர்மாதபில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவறாமல்அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிறோம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர்
'காஞ்சி'

வாங்கிவிட்டீர்களா?

ஆலடி அருணா
எழுதிய

இந்தி
ஏகாதிபத்தியம்

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
கலைஞர் கருணாநிதி
பாராட்டிய

பைந்தமிழர் அணிகலன்
பகைவீழ்த்தும் படைக்கலன்

விலை ரூ. 5—00
406 பக்கங்கள்

வணிகர்களுக்கு 20 சதவீதம் கழிவு

முன்பணம் கொடுத்தே பிரதிகளைப் பெறுக.

மதிவாணன் வெளியீடு,
18, முனுசாமி செட்டித் தோட்டம்,
—3-வது சந்து—
சென்னை-21.

[illegible]